வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

Email : news@eelanadu.lk | மலர் : 04 | 26.10.2023 வியாழக்கிழமை | இதழ் : 321 | பக்கங்கள் : 16


மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
MoneyGram money transfer — மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER — ரியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER — வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

# மீண்டும் ஒரு யுத்தம் ஏற்படும்! தமிழர்களை வெட்டுவேன்!!

## அம்பிட்டிய சுமணரத்ன தேரரால் மட்டு. இருதயபுரத்தில் பதற்றம்

மட்டக்களப்பு, ஒக்ரோபர் 26

அனைத்து தமிழர்களையும் வெட்டுவேன், என்ன செய்கிறார்கள் என பார்ப்போம் என்று மட்டக்களப்பு மங்களாராமய விகாரையின் விகாராதிபதி அம்பிட்டிய சுமணரத்ன தேரர் தெரிவித்துள்ளார்.

சாணக்கியன் மற்றும் இங்குள்ள அதிகாரிகள் மேற்கொள்ளும் கீழ்த்தரமான நடவடிக்கைகளால் மீண்டும் ஒரு யுத்தம் ஏற்படும் என்றும் அவர் குறிப்பிட்டார். 11





## சர்ச்சைக்குரிய சீனக் கப்பல் நேற்று கொழும்புக்கு வந்தது

கொழும்பு, ஒக். 26

ஒக்ரோபர் மாதத்திற்குள் இலங்கைக்கு வருகை தருவதற்கு அனுமதி வழங்கப்படவில்லை என வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்த சீன ஆய்வுக் கப்பல் நேற்று இலங்கை கடற்பரப்பிற்கு வருகை தந்தது.

ஷி யான் 6 எனும் சீனாவின் ஆய்வுக் கப்பல், ஒரு மாத காலத்திற்கும் மேலாக இந்து சமுத்திரத்தில் இருந்ததுடன், நேற்று கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்தது. தற்போது கொழும்பு துறைமுகத்தின் எஸ்.ஏ.முனையத்தில் நங்கூரமிட்டுள்ளது.

கடந்த மாதம் 11 ஆம் திகதி குவென்ஷோ துறை முகத்திலிருந்து புறப்பட்ட சீன ஆய்வுக் 11

## சட்டவிரோதமாக செயல்படுகிறார் டக்ளஸ்!

*யாழ். மீனவர் சம்மேளன முன்னாள் தலைவர் குற்றச்சாட்டு*

யாழ்ப்பாணம்,ஒக். 26

கடல்தொழில் அமைச்சராக டக்ளஸ் தேவானந்தா பதவி ஏற்று 3 வருடங்கள் ஆனபோதும் இதுவரை எந்த வித சட்டவிரோதமான செயல்பாடுகளையும் அவர் நிறுத்தவில்லை என யாழ்.மாவட்ட கடற்தொளிழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளன முன்னாள் தலைவர் அ.அன்னராசா தெரிவித்தார்.

யாழில் நேறறு நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- 11

## கிளிநொச்சியில் காணி விடுவிப்பது தொடர்பாக பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு தெளிவுபடுத்தல்

கிளிநொச்சி, ஒக். 26

கிளிநொச்சி மாவட்டத்தில் வனவளத் திணைக்களத்தின் உள்ள காணிகளை விடுவிப்பது தொடர்பாக பாராளுமன்ற உறுப்பினர்களை தெளிவுபடுத்தும் கலந்துரையாடல் ஒன்று கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் எஸ்.முரளிதரன் தலைமையில் நடைபெற்ற குறித்த கலந்துரையாடலில் ஜனாதிபதியின் வடக்குக்கான இணைப்பாளர் எல்.இளங்கோவன், 11

## கோமாளிகளின் கூடாரமாக மாறியுள்ளது பாராளுமன்றம்

*சிறிதரன் எம்.பி. குற்றச்சாட்டு*

கிளிநொச்சி, ஒக். 26

கோமாளிகளின் கூடாரமாக பாராளுமன்றம் மாறியுள்ளதாக தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் தெரிவித்தார். கிளிநொச்சியில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இதனை குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்-

தற்பொழுது இலங்கையின் பாராளுமன்றம் கோமாளிகளின் கூடாரமாக மாறியுள்ளதுடன் இலங்கையில் தற்பொழுது அதிகமானவர்கள் ஒருவேளை உணவையே உண்ணும் நிலை ஏற்பட்டுள்ளது. 11

## ‘சிஸ்டம் சேஞ்ச்’ விரைவில்!

*அமைச்சர் மனுஷ உறுதி*

கொழும்பு, ஒக். 26

மக்கள் எதிர்பார்க்கும் முறைமைகளில் (Systems Change) மாற்றத்தை ஏற்படுத்துவதற்காக தற்காலத்திற்கு ஏற்ற புதிய சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகளை அறிமுகப்படுத்த அரசாங்கம் 11

## புதிய பொருளாதார முறைமையை நோக்கி இலங்கையை இட்டு செல்வதற்கு ஒன்றுபடுக!

*ஜனாதிபதி ரணில் அழைப்பு*

கொழும்பு, ஒக். 26

விவசாய மற்றும் தொழில்நுட்பத் துறைகளின் புரட்சிகர மாற்றத்திற்கான பல்வேறு புதிய திட்டங்கள் நடைமுறைப்படுத்தப் படும் போது, பொறியியலாளர்களின் பங்களிப்பு மிக மிக்கியமானது என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

தாய்லாந்து, மலேசியா போன்ற நாடுகளின் விவசாய மற்றும் பெருந்தோட்ட அமைச்சுக்களின் கீழ் முன்னெடுக்கப்படும் திட்டங்களை 11

## போதைப்பொருள் வியாபாரிகளை இந்த அரசாங்கமே பாதுகாக்கிறது

*எதிர்க்கட்சித் தலைவர் குற்றச்சாட்டு*

கொழும்பு, ஒக். 26

போதைப்பொருள் கடத்தல்காரர்கள் பொதுமக்கள் பணத்தில் சிறைகளில் பராமரிக்கப்பட்டு வருவதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச குற்றம் சுமத்தியுள்ளார்.

கம்பஹா, மீரிகம பிரதேசத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- 11

## கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழிப் பகுதியில் பாதுகாப்பு கருதி சி.சி.ரி.வி கமெராக்கள் பொருத்தம்

முல்லைத்தீவு, ஒக். 26

முல்லைத்தீவு கொக்குத்தொடுவாயில் மனிதப் புதைகுழி என சந்தேகிக்கப்படும் இடத்தில் சிசிரிவி கமெராக்கள் பொருத்தப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையின் சட்ட வைத்திய அதிகாரி கனகசபாபதி வாசுதேவ, “குறித்த இடத்திற்கு பாதுகாப்பு வழங்குமாறு மாவட்ட செயலகத்திடம் விடுத்த கோரிக்கையை அடுத்து இவ்வாறு சிசிரிவி கமராக்களை பொருத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மனிதப் புதைகுழி என சந்தேகிக்கப்படும் இடத்தில் அகழ்வாராய்ச்சிகள் இடைநிறுத்தப் பட்டுள்ளன. ஒரு 11



**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

## இப்படியும் நடக்கிறது

நீண்ட நாள் கழித்து வீட்டிற்கு வந்த நண்பன் சோமுவை வரவேற்று அவருடன் பேசிக் கொண்டிருந்தார் ராமு.

அப்போது சிறுவனான அவருடைய இளைய மகன் அங்கு வந்து சோமுவின் மடியில் உட்கார்ந்து குதிக்க ஆரம்பித்தான். ‘மாமாவைத் தொந்தரவு செய்யக் கூடாது’ என்று மகனை கண்டித்தார் ராமு.

உடனே சோமு, ‘அவன் சிறுவன்தானே!அவனுக்கு என்ன தெரியும்? அவன் பாட்டிற்கு உட்கார்ந்திருக்கட்டும்.’ என்றார்.

சிறிது நேரம் கழித்து சிறுவன் அவர் மீது விளையாட்டு சாமான்களைத் தூக்கி எறிந்தான்.

அப்போதும் அவனை ராமு கண்டித்தார். அதற்கும், சோமு, ‘பாவம் அவனுக்கு என்ன தெரியும்?அவன் விளையாடட்டும்,’ என்றார்.

பின் சிறுவன், சோமுவின் தோளில் ஏறிக்கொண்டு அவர் காதைப் பிடித்து திருக ஆரம்பித்தான். அவருக்கு கடுமையான வலி. ராமு சிறுவனை அடிக்கப் போனார். தடுத்த சோமு, ‘சிறுவனுக்கு என்ன தெரியும்? விட்டுவிடு,’ என்றார்.

‘ஐந்து நிமிடம் பொறு. உனக்கு கோப்பி போட்டு எடுத்து வருகிறேன்’ என்று சொல்லி ராமு உள்ளே சென்றார். அவர் கண் மறைந்ததும் சோமு நாக்கைத் துருத்திக் கொண்டு, சிறுவனை முதுகில் இரண்டு போட்டு காதைப் பிடித்துத் திருகினார்.

சிறுவன் அழ ஆரம்பித்து விட்டான். ‘என்ன, என்ன’ என்று கேட்டுக்கொண்டே ராமு ஓடி வந்தார்.

சோமுவும் சிரித்துக் கொண்டே, ‘அவனுக்கு என்ன தெரியும், சிறுவன்தானே, அழுதுவிட்டுப் போகட்டும்’ என்றார்.

இந்தக் கதைதான் அந்தச் செய்திகளைப் பாரத்ததும் ஞாபகத்திற்கு வந்தது.

“இலங்கை தமிழரசுக்கட்சியின் சிரேஷ்ட தலைவரும், திருகோணமலை பாராளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன், அவருடைய முதுமை காரணமாக செயற்பாட்டு அரசியலில் பங்களிப்புச் செய்ய முடியாதிருப்பதன் காரணமாக அவர் தனது பதவியைத் துறக்க வேண்டுமென அக்கட்சியின் பேச்சாளரும், யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன் பகிரங்கமாக கோரியுள்ளார்.”

இது ஒரு செய்தி. மற்றையது:

“ஜனாதிபதி கூட்டணிக் கட்சிகளின் தலைவர்களுடன் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டு கட்சிகள் மத்தியில் அமைதியை பேணவேண்டும். எதிர்காலத்தில் தீர்மானங்களை எடுக்கும்போது ஜனாதிபதி கூட்டணி கட்சித் தலைவர்களுடன் கலந்தாலோசிக்க வேண்டும் என அவருக்கு ஆலோசனை வழங்குவதாக நாமல் ராஜபக்ச எம்.பி. குறிப்பிட்டார்.’”

சம்பந்தன் ஐயா, தனது முதுமை காரணமாக பாராளுமன்றத்திற்கு செல்லமுடியாத நிலையில் இருப்பது ஒன்றும் இரகசியமானது அல்ல. அவருக்கு எதிராக கட்சியின் மத்திய குழுக்கூட்டத்தில் சிலர் திட்டமிட்டு, கோஷ்டியாக வந்து திருகோணமலை மக்களின் தேவைகளைக் கவனிக்க பாராளுமன்ற உறுப்பினரான சம்பந்தன் முடியாதவராக இருப்பதால் அவர் பதவி விலகி அவருக்கு அடுத்த இடத்தில் இருக்கும் (தேர்தல் விருப்பு வாக்கில்) குகதாசனை பாராளுமன்ற உறுப்பினராக ஆக்குவதற்கு வழிவிடவேண்டும் என்று கோரிக்கை வைத்ததும், அந்த கோரிக்கையைத் தொடர்ந்து கட்சி மூவர் குழு ஒன்றை அமைத்து சம்பந்தனுடன் பேசியதும் பழைய செய்திகள் தான்.

ஆனால் அவ்வாறு நியமிக்கப்பட்ட குழு, சம்பந்தனைச் சந்தித்து மத்திய குழுக்கூட்டத்தில் நடந்தவற்றை எடுத்துக்கூறியபோது, சம்பந்தன் தனக்கே உரிய பாணியில் பதிலளித்ததாகவும் அப்போது செய்திகள் வெளிவந்திருந்தன.

கடந்த 2021 ஆண்டுத் தேர்தலில் திருகோணமலையில் போட்டியிட்டபோதே சம்பந்தன் செயற்பட முடியாத நிலையில்தான் இருந்தார். அடுத்த அடுத்த ஆண்டுகளில் அவரது நிலைமை எப்படியருக்கும் என்பதையும் தெரிந்துகொண்டேதான் திருகோணமலை மக்கள் அவருக்கு வாக்களித்திருந்தனர் என்றும், எனவே முதுமையை காரணம் காட்டி தன்னை பதவி விலகச் செல்லமுடியாது என்றும் அப்போது சம்பந்தன் ஐயா தெரிவித்திருந்ததாக செய்திகள் வெளிவந்திருந்தன. அதன் பின்னரும், சம்பந்தன் பதவி விலகவேண்டும் என்று அவரது அரசியல் சிஷ்யன் இப்போது பகிரங்கமாக அழைப்பு விடுத்திருக்கிறார். அதற்கு சம்பந்தன் ஐயாவின் பதில் எப்படியிருக்கும் என்பது தெரியாததல்ல.

அண்மையில் அமைச்சரவையில் ஜனாதிபதி சில மாற்றங்களைச் செய்திருந்தார். அந்த மாற்றங்களின்போது சிறிலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த இருவருக்கு மேலதிகமாக சில அமைச்சுக்களை வழங்கியிருப்பது பொதுஜன பெரமுவினர் மத்தியில் சிறிய சலசலப்பை ஏற்படுத்தியிருந்தது.

அமைச்சரவையில் மாற்றங்கள் செய்யப்படவிருப்பதாக அண்மைக்காலமாக செய்திகள் வந்துகொண்டிருந்தபோதே, பொதுஜன பெரமுனவினர் சிலர் தமக்கும் அதில் இடம் கிடைக்கும் என்று எதிர்பார்த்திருந்திருக்கலாம். ஆனால் ஜனாதிபதியோ, புதிதாக யாரையும் சேர்த்துக்கொள்ளாமல், அதிகம் ஏன் தனது கட்சியிலுள்ள ஒரேயொரு எம்.பியான வஜிர அபேவர்த்தனவுக்கு கூட கொடுக்காமல், இருக்கின்ற அமைச்சர்களுக்கே மேலதிகமாக சில அமைச்சுக்களை வழங்கினார். இதன்மூலம் தனது அமைச்சரவையில் செயற்படுகின்ற சில அமைச்சர்களுக்கு மேலதிகமாக பொறுப்பக்களை வழங்கினார்.

சம்பந்தனின் முன்னைய பதிலும், ஜனாதிபதியின் அமைச்சரவை மாற்றமும் அவர்களது அரசியல் முதிர்ச்சியின் விளைவு என்றால், அவர்களுக்கு அரசியல் பாடம் எடுக்கும் மற்றவர்களின் நடவடிக்கையை என்னவென்பது என்பது, நான் இங்கே எழுத்தித் தான் தெரியவேண்டும் என்பது அல்லவே.!

**-ஊர்க்குருவி.**

‘இலங்கையின் இலவச சுற்றுலா விஸா’

## அமெரிக்கா நிராகரிக்கப்பட்டதன் பின்புலத்தில் அரசியல் நகர்வா?

கொழும்பு, ஒக். 26

இந்தியா, சீனா, ரஷ்யா, மலேசியா, ஜப்பான், இந்தோனேசியா மற்றும் தாய்லாந்து ஆகிய நாடுகளுக்கு இலங்கை சுற்றுலா பயணிகள் விஸா இன்றி நாட்டுக்குள் பிரவேசிப்பதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

2024ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31ஆம் திகதி வரை பரீட்சார்த்தமாக இத்திட்டம் முன்னெடுக்கப்பட உள்ளது.

இந்தியா, சீனா, ரஷ்யா ஆகிய உலக வல்லரசுகளுக்கு இலவச விசா திட்டத்தை இலங்கை அங்கீகரித்துள்ளபோதிலும் இந்தப் பட்டியலில் அமெரிக்கா இல்லை.

இலங்கைக்கு அதிகமான சுற்றுலாப் பயணிகளை ஈர்ப்பதே இந்த நடவடிக்கையின் நோக்கம் என இலங்கையின் சுற்றுலா அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்தியா, சீனா, ரஷ்யாவுக்கு அடுத்தபடியாக கனடா, ஜேர்மனி, அமெரிக்கா, மாலைதீவு மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகளில் இருந்துதான் இலங்கைக்கு அதிகமான சுற்றுலாப் பயணிகள் வருகின்றனர்.

2022ஆம் ஆண்டு இலங்கைக்கு வந்துள்ள சுற்றுலாப் பயணிகளில் 7.2 வீதமானவர்கள் அமெரிக்கர்களாகும். என்றாலும், அமெரிக்காவை இலங்கை தமது இலவச விஸா திட்டத்தில் இணைத்துக் கொள்ளவில்லை.

இதனால் அமெரிக்கா இலங்கை மீது கவலை அடைந்துள்ளதாக இராஜதந்திர தகவல்கள் தெரிவிக்கின்றன.

எதிர்வரும் ஆண்டுகளில் சுற்றுலாப் பயணிகளின் வருகையை ஐந்து மில்லியனாக அதிகரிக்க எதிர்பார்க்கும் இலங்கை இத்திட்டத்தில் அமெரிக்காவை இணைத்துக் கொள்ளாமை பெரும் சர்ச்சைகளை ஏற்படுத்தியுள்ளது. இலங்கைக்கு இந்த விடயம் சிலவேளை பாதிப்பாகக்கூட அமையலாம் என சுற்றுலாத்துறை நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.

அண்மைக்காலமாக இலங்கை அரசியலில் அமெரிக்கா தலையீடுகளை மேற்கொண்டுவருவதாக குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு வருகிறது.

இலங்கையின் உள்விவகாரங்கள் தொடர்பான கருத்துக்களை வெளியிடுவதை தவிர்க்குமாறு அமெரிக்க தூதுவர் ஜூலி சங்கிற்கு தேசிய பாதுகாப்பு தொடர்பான பாராளுமன்றத்தின் துறைசார் கண்காணிப்புக் குழு பரிந்துரை செய்திருந்தது.

2022ஆம் ஆண்டு மே 9ஆம் திகதி அமெரிக்கத் தூதுவர் வெளியிட்டிருந்த சில கருத்துகளுக்கு கடுமையான எதிர்ப்புகள் வெளியாகியிருந்த நிலையில் இலங்கையின் உள்விவகாரங்களில் அமெரிக்கத் தூதுவர் தலையிடுவதை நிறுத்தவேண்டுமென தேசிய பாதுகாப்பு தொடர்பான பாராளுமன்றத்தின் துறைசார் மேற்பார்வைக் குழுவின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான ஓய்வுபெற்ற ரியர் அட்மிரல் சரத் வீரசேகர, கடும் கண்டனத்தை வெளியிட்டிருந்தார்.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய உட்பட இலங்கையில் பல முக்கிய நபர்களின் அமெரிக்கா விசாக்கள் நிராகரிக்கபட்டிருந்தன.

அண்மையில்கூட ஓய்வுபெற்ற ரியர் அட்மிரல் சரத் வீரசேகர, அமைச்சர் பிரசன்ன ரணதுங்க மற்றும் உதய கம்மன்பில ஆகியோரது அமெரிக்க விசா நிராகரிக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியிருந்தன.

இலங்கை மீதான அமெரிக்காவின் தொடர்ச்சியாக அழுத்தங்கள்கூட இந்த பட்டியலில் அமெரிக்காவை இணைத்துக் கொள்ளாமைக்கான காரணமாக இருக்கலாம் என சர்வதேச அரசியல் ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். (அ)

## நியூசிலாந்து உதவியுடன் இலங்கையில் நிறுவப்படுகிறது குடிவரவு வள மையம்!

கொழும்பு, ஒக். 26

கிழக்கு மாகாணத்தில் குடிவரவு வள மையத்தை அமைப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தை கைச்சாத்திடுவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

போதுமானளவு வசதிகளை வழங்குவதற்காக குடிவரவு வள மையத்தை அமைப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.

புலம்பெயர்ந்தோர் எதிர்கொள்ளும் பிரச்னைகள் மற்றும் சவால்களை குறைப்பதற்காக உரிய நேரத்தில் வழிகாட்டும் வகையில் அமைக்கப்படவுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

குறித்த திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கான ஒத்துழைப்புக்களை வழங்குவதற்கு நியூசிலாந்து அரசாங்கம் இணக்கம் தெரிவித்துள்ளது.

இதன்படி, நியூசிலாந்து அரசாங்கம் 350,000 நியூசிலாந்து டொலர் நிதியினை வழங்குவதற்கு ஒப்புக்கொண்டுள்ளது.

இந்த நிலையிலே, முன்மொழியப்பட்ட குடிவரவு வள மையத்தினை அமைப்பதற்கான ஒப்பந்தத்தினை கைச்சாத்திருவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

(அ)

டயனா கமகே மீதான தாக்குதல்

## ஒழுக்காற்று நடவடிக்கை முன்னெடுக்கத் தீர்மானம்!

கொழும்பு, ஒக். 26

இராஜாங்க அமைச்சர் டயனா கமகே மீது, ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் சுஜித் சன்ஜய பெரேரா மற்றும் ரோஹன பண்டார தாக்குதல் நடத்தியதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பாக விசாரணை செய்ய நியமிக்கப்பட்ட, விசாரணைக்குழு நேற்று முதன் முறையாக கூடியது.

குறித்த குழுவானது நேற்று பாராளுமன்றக் கட்டடத் தொகுதியில் கூடி, கடந்த வெள்ளிக்கிழமை பாராளுமன்றில் இடம் பெற்றதாகக் கூறப்படும் தாக்குதல் சம்பவம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டிருந்தது.

இவ்விடயம் தொடர்பாக கருத்து வெளியிட்ட பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ஷ, “இந்த தாக்குதல் சம்பவத்தின் பிரதான சாட்சியாளராக இராஜாங்க அமைச்சர் பியல் நிசாந்தவை நாம் இணங்கண்டுள்ளோம்.

இவரை அடுத்த அமர்வில் அழைப்பிக்க நாம் தீர்மானித்துள்ளோம்.

அத்தோடு, சம்பவத்திற்கு பொறுப்பான இரண்டு பாராளுமன்ற உறுப்பினர்களையும் இராஜாங்க அமைச்சரையும் விசாரணைக்கு அழைப்பிக்க தீர்மானித்துள்ளோம்.

மேலும், விசாரணைக்குழுவுக்கு இரண்டு பெண் உறுப்பினர்களின் ஒத்துழைப்பை பெறவும் நாம் எதிர்ப்பார்த்துள்ளோம். பாராளுமன்றின் கௌவரத்தை பாதுகாக்கும் வகையில் எமது அடுத்தக்கட்ட நடவடிக்கையை முன்னெடுப்போம்.

விசாரணைக்குழுவானது எதிர்வரும் நவம்பர் 6 ஆம் திகதி காலை 10 மணிக்கு மீண்டும் கூடவுள்ளது. குற்றம் இழைத்தவர் மீது நாம் கடுமையான ஒழுக்காற்று நடவடிக்கையை மேற்கொள்வோம்.

அநாகரீகமாக பாராளுமன்றில் நடந்துக் கொள்ள உறுப்பினர்களுக்கு அதிகாரம் கிடையாது - என்றார்.

(அ)

ஈழநாடு
Eelanadu
26.10.2023 வியாழக்கிழமை
சோபகிருது வருடம், ஐப்பசி 09

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## சம்பந்தனை அகற்றுதல்

திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தன் பணியாற்ற முடியாத நிலையில் இருப்பதால், அவர் பதவி விலகுவதே சரியானதென்று தமிழரசுக கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் தெரிவித்திருக்கின்றார். சுமந்திரன், சம்பந்தனின் நம்பிக்கைக்குரிய ஒருவராக இருந்தவர். அரே சம்பந்தனின் பதவி விலகலை கோரும் நிலைமை உருவாகியிருக்கின்றது.

சம்பந்தனை பதவி விலகி, தனக்கு அடுத்த நிலையில் வாக்குகளை பெற்றவரிடம் பதவியை ஒப்படைக்க வேண்டுமென்று, இதற்கு முன்னரும் கூட, சிலர் அபிப்பிராயங்களை வெளியிட்டிருக்கின்றனர். திருகோணமலையை சேர்ந்த ஒரு குழுவினர் தமிழரசுக் கட்சியின் மத்திய குழுவிடமும், இது தொடர்பில் முறையிட்டிருந்தனர். இது தொடர்பில் சம்பந்தனுடன் தமிழரசு கட்சியின் உயர் குழுவொன்று கலந்துரையாடியுமிருந்தது - எனினும் சம்பந்தன் அதனை நிராகரித்துவிட்டார்.

இவ்வாறானதொரு பின்னணியில் முதல் முறையாக தமிழரசுக் கட்சியின் முக்கிய பாராளுமன்ற உறுப்பினரான சுமந்திரன், பொது வெளியில் சம்பந்தனின் பதவி விலகல் கோரிக்கையை முன்வைத்திருக்கின்றார். ஆனால் சம்பந்தன் பதவி விலகும் நிலையிலிருப்பதாக தெரியவில்லை. சம்பந்தனை பொறுத்தவரையில் திருகோணமலை மக்கள் தனது நிலைமை அறிந்தே, வாக்களித்திருக்கின்றனர் - எனவே தான் பதவி விலகவேண்டிய அவசியமில்லை. எனினும் சம்பந்தனது பதவி விலகல் விவகாரமானது, சம்பந்தனுடன் முடிந்துவிடக் கூடிய விடயமுமல்ல. தமிழரசுக் கட்சியை புதியவர்களின் கீழ் கொண்டுவர வேண்டுமென்னும் வாதமுண்டு. இந்த பின்புலத்தில் மாவை சேனாதிராசா உட்படமுதிய நிலையிருப்பவர்கள் பலரும் வெளியேறுவதே கட்சிக்கு நல்லதென்னும் அப்பிராயமும் வெளிவரக் கூடும். சுமந்திரன் அதற்கான பிள்ளையார் சுழியையே தற்போது வரைந்திருக்கின்றார்.

சும்பந்தன் தொடர்பில் அதிருப்திகள் நிலவுகின்றன. ஒரு மாவட்டத்தின் பாராளுமன்ற உறுப்பினரான அவர், குறித்த மாவட்டத்தில் தனக்கு வாக்களித்த மக்களை சந்திப்பதற்கே முடியாத நிலையிலிருக்கின்றார். இந்த நிலையில் அவர் பதவி விலக வேண்டுமென்னும் கோரிக்கையை தமிழரசுக் கட்சி உத்தியோகபூர்வமாக கோர முடியும். கட்சியின் மத்திய குழுவில் தீர்மானமொன்றை கொண்டுவந்து, சம்பந்தனை வெளியேற்றலாம் - அதற்கு கட்சி தயாராக இருக்கின்றதா என்னும் கேள்வியுண்டு.

ஆனால் தமிழரசுக் கட்சியின் பாரம்பரியத்தில் முதுமையினால் இயங்க முடியாத நிலையிருப்பவர்கள், தலைமையிலிருப்பது, புதிய விடயமல்ல. தமிழரசுக கட்சியை உருவாக்கிய எஸ்.ஜே.வி.செல்வநாயகம், சக்கரநாற்காலியில் இருக்கும் நிலையிலும் கட்சியின் தலைமையை கைவிடவில்லை. அவரை வெளியேறுமாறும் எவரும் கோரவில்லை - காரணம் கட்சியில் அவர் இயங்க முடியாத நிலையிருந்தாலும், அவரது பெயர் கட்சிக்குத் தேவைப்பட்டது. அவர் ஒரு அரசியல் அடையாளமாக இருந்தார். அதே போன்று சிவசிதம்பரம் மரணப் படுக்கையில் இருக்கின்றபோது கூட, அவரது பதவியை இராஜினாமா செய்யவில்லை. இவ்வாறானதொரு பின்புலத்தில் சம்பந்தன் எழுந்து நடக்கக் கூடிய நிலையிலிருக்கின்றபோது, பதவியிலிருந்து விலக முன்வருவாரா என்பது சந்தேகமே - அவ்வாறாயின் அவரை பதவியிலிருந்து வெளியேற்ற வேண்டும். தமிழரசுக கட்சியை பொறுத்தவரையில் சம்பந்தன் இனி தேவையிலையென்னும் நிலைமை ஏற்பட்டுவிட்டது. இந்த நிலையில்தான் சுமந்திரனால் அவரது பதவி விலகலை பகிரங்கமாக கூறமுடிகின்றது.

சம்பந்தன் இயங்கு நிலையிலிருக்கின்ற போது - தனக்கு பின்னரான கட்சியின் எதிர்காலத்தை கருத்தில் கொண்டோ, தமிழ் தேசியக் கூட்டமைப்பின் எதிர்காலத்தை கருத்தில்கொண்டோ - ஆகக் குறைந்தது, தனது மாவட்டத்தை கருத்தில் கொண்டோ தூரநோக்குடன் செயற்படவில்லை. இவ்வாறானதொரு பின்னணியில், இயங்க முடியாத நிலையிலிருக்கும் சம்பந்தனை அவரது கட்சி கூட கருத்தில் கொள்ளக் கூடிய நிலையில்லை.

# வீரபுரம் கிராம மக்களுக்கு நீதியை வழங்க வேண்டும்

### சாள்ஸ் எம்.பி வேண்டுகோள்

வவுனியா, ஒக். 26

வீரபுரம் கிராம மக்களுக்கென ஒதுக்கப்பட்ட காணிகளை அம்மக்களுக்கே வழங்குவதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.

குறித்த பகுதிக்கு நேற்று முன்தினம் விஜயமொன்றினை மேற்கொண்டு மக்களுடன் கலந்துரையாடியதுடன், அங்கு கருத்து தெரிவித்த அவர்,

"வவுனியா செட்டிகுளம் பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட வீரபுரம் கிராம மக்களுக்கு 1994 ஆம் ஆண்டு அரசாங்கத்தினால் காணிகள் ஒதுக்கப்பட்டன. ஆனால், யுத்த காலக் கட்டத்தில் ஏற்பட்ட இடப்பெயர்வின் காரணமாக குறித்த காணிகளை மக்கள் பயன்படுத்த முடியாத நிலைமை காணப்பட்டது.

குறித்த காணிகளில் வீரபுரம் கிராம மக்கள் மீள் குடியேற பல்வேறு தடைகள் ஏற்படுத்தப்பட்டு வந்தன.

சம்பவம் தொடர்பில் வீரபுரம் கிராம மக்கள் எனது கவனத்திற்கு கொண்டுவந்தனர்.

நீண்டகால முயற்சிக்கு பின் வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர், வெங்கல செட்டிகுளம் பிரதேச செயலாளர், கிராம அலுவலர் மற்றும் பொது அமைப்பின் பிரதிநிதிகள் என பலரும் குறித்த பகுதிக்கு விஜயமொன்றினை மேற்கொண்டிருந்தோம்.

நேரடியாக கள நிலைமைகளை ஆராய்ந்ததன் பின்னர் வீரபுரம் கிராம மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவென அரசாங்கத்தினால் ஒதுக்கப்பட்ட காணிகளை மீண்டும் அம் மக்களுக்கு வழங்க உடனடி நடவடிக்கை எடுக்கப்படும் என அரசாங்க அதிபரினால் உறுதியளிக்கப்பட்டது - என்றார். (அ)

# இஸ்ரேலில் காணாமல்போன இலங்கையரின் அடையாளத்தை உறுதி செய்வதற்கு டி.என்.ஏ.!

கொழும்பு, ஒக். 26

இஸ்ரேலில் இடம்பெற்ற மோதலின்போது உயிரிழந்த அனுலா ரத்நாயக்கவின் பூதவுடல் நேற்று இறுதி அஞ்சலி செலுத்தப்பட்டதன் பின்னர் இலங்கைக்கு அனுப்பி வைக்கப்படும் என இஸ்ரேலுக்கான இலங்கை தூதரகம் தெரிவித்துள்ளது.

எதிர்வரும் 3 நாட்களுக்குள் பூதவுடல் இலங்கைக்கு அனுப்பி வைக்கப்படும் என அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, மோதலின் போது காணாமல் போன மற்றைய இலங்கை பிரஜையின் மரணத்தை உறுதிப்படுத்தும் வகையில் அவரது 2 பிள்ளைகளின் மரபணு மாதிரிகள் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளதாக இஸ்ரேலுக்கான இலங்கைத் தூதுவர் கூறியுள்ளார்.

மரபணு மாதிரிகள் நேற்றுமுன்தினம் கொழும்பில் பெற்றுக்கொள்ளப்பட்டன.

ஹமாஸ் தாக்குதலில் உயிரிழந்த வெளிநாட்டவர்கள் உள்ளிட்ட சுமார் 350 பேரின் சடலங்கள் இஸ்ரேல் வைத்தியசாலைகளில் வைக்கப்பட்டுள்ளதாகவும் அவை அடையாளம் காண முடியாதளவுக்கு கருகிய நிலையிலுள்ளதாகவும் நிமல் பண்டார குறிப்பிட்டார்.

காணாமல்போன இலங்கையரின் சடலம் அவற்றில் உள்ளதா என்பதை உறுதிப்படுத்த மரபணு மாதிரிகள் பயன்படுத்தப்படும் எனவும் அவர் கூறினார். (அ)

# அமைச்சின் செயலர்கள் மாற்றப்படும் சாத்தியம்

### கடமை தவறியவர்கள் நீக்கம்

கொழும்பு, ஒக். 26

அமைச்சுக்கள் பலவற்றின் செயலாளர்களில் திருத்தம் மேற்கொள்வது தொடர்பில் ஜனாதிபதி கவனம் செலுத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

குறித்த திருத்தத்தின் கீழ் சில அமைச்சுக்களின் செயலாளர்கள் இடமாற்றம் செய்யப்படவுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன், மக்கள் நலக் கொள்கைகளை முறையாக நடைமுறைப்படுத்தத் தவறிய அமைச்சுக்களின் செயலாளர்கள் நீக்கப்படவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

வங்குரோத்து நிலையில் உள்ள நாட்டை கட்டம் கட்டமாக மீளக் கட்டியெழுப்புவதற்கு அரசாங்கம் எடுத்துவரும் பொருளாதார மற்றும் சமூக நலன்புரி கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதற்கு ஆதரவளிக்காத அமைச்சின் செயலாளர்கள் தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் முறைப்பாடுகள் முன்வைக்கப்பட்டுள்ளதாக அரசாங்கத்தின் சிரேஷ்ட உறுப்பினர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

மக்களுக்கு உரிய சேவை கிடைக்கவில்லை என பொதுமக்கள் முறைப்பாடுகளை பெற்றுக்கொண்ட அமைச்சின் செயலாளர்கள் தொடர்பில் மீளாய்வு செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



**ஒக்ரோபர் - 26 வியாழக்கிழமை**
**சோபகிருது வருடம் - ஐப்பசி 09**
**நல்ல நேரம் : 10.30 - 12.00**
**ராகு காலம் : 01.30 - 03.00**
**திதி : திரையோதசி**




**மேடம்**
குடும்பத்தாரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். வியாபாரத்தில் புது இடத்திற்கு கடையை மாற்றுவீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் பாராட்டுவார்கள். பெருந்தன்மையுடன் நடந்துக் கொள்ளும் நாள்.

**இடபம்**
கடந்த கால சுகமான அனுபவங்களை சாதனைகளை அவ்வப்போது நினைத்து மகிழ்வீர்கள். உத்தியோகத்தில் மூத்த அதிகாரிகள் முக்கிய அறிவுரைத் தருவார்கள். முயற்சிகள் பலிதமாகும்.

**மிதுனம்**
உணர்ச்சிப்பூர்வமாக பேசுவதை விட்டு அறிவுப்பூர்வமாகப் பேசுவீர்கள் செயல்படுவீர்கள். வியாபாரத்தில் புதிய முயற்சிகள் பலிதமாகும். நிம்மதி உண்டாகும். புதிய பாதை தெரியும் நாள்.

**கடகம்**
சந்திராஷ்டமம் தொடங்கியிருப்பதால் வேலைச் சுமையால் உடல் அசதி சோர்வு வந்து நீங்கும். உத்தியோகத்தில் யாரையும் பகைத்துக் கொள்ளாதீர்கள். பொறுமை தேவைப்படும் நாள்.

**சிம்மம்**
குடும்ப விசேஷங்களில் கலந்து கொள்வீர்கள். வியாபாரத்தில் வேலையாட்கள் மதிப்பார்கள். உத்தியோகத்தில் உங்களின் நிர்வாக திறமை வெளிப்படும். தன்னம்பிக்கை துளிர்விடும் நாள்.

**கன்னி**
குடும்பத்தாரின் எண்ணங்களை கேட்டறிந்து பூர்த்தி செய்வீர்கள். வியாபாரத்தில் அனுபவமிக்க வேலையாட்களை தேடுவீர்கள். உயரதிகாரி சில சூட்சுமங்களை உணர்வார்கள். அமோகமான நாள்.

**துலாம்**
புதிய சிந்தனைகள் மனதில் தோன்றும். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும். உத்தியோகத்தில் ஒரு புதிய சாதனை படைப்பீர்கள். நினைத்தது நிறைவேறும் நாள்.

**விருட்சிகம்**
எதிர்ப்புகள் அடங்கும். தவியாபாரத்தில் புது பங்குதாரரை சேர்ப்பீர்கள். உங்கள் அதிகாரிகள் உங்களுக்கு உதவுவார்கள். சூட்சுமங்களை உணர்வீர்கள். தேவைகள் பூர்த்தியாகும் நாள்.

**தனுசு**
துணிச்சலான முடிவுகள் எடுப்பீர்கள். வியாபாரத்தில் சில மாற்றங்கள் செய்வீர்கள். உத்தியோகத்தில் மேலதிகாரி உங்களிடம் புதிய பொறுப்புகளை ஒப்படைப்பார். தைரியம் கூடும் நாள்.

**மகரம்**
குடும்பத்தாரின் ஆதரவு பெருகும். விலை உயர்ந்த பொருட்களை வாங்குவீர்கள். வியாபாரத்தில் பழைய பாக்கிகள் வசூலாகும். உங்களை முழுமையாக நம்புவார். அதிரடி மாற்றம் உண்டாகும்.

**கும்பம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் ஒரே நேரத்தில் இரண்டு மூன்று வேலைகளை இழுத்துப் போட்டுப் பார்க்க வேண்டி வரும். மறதியால் பிரச்னை வரக்கூடும். சகிப்புதன்மை தேவைப்படும் நாள்.

**மீனம்**
குடும்பத்தைப் பற்றிய கவலைகள் வந்து போகும். சவியாபாரத்தில் போராடி லாபம் ஈட்டுவீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் சங்கடங்கள் வரும். தடைகளை தாண்டி முன்னேறும் நாள்.

# சர்வதேச கடலில் கடத்தலில் ஈடுபட்ட இலங்கையர்கள் உட்பட 12 பேர் கைது

சென்னை, ஒக். 26

**இலங்கை - இந்திய சர்வதேச கடல் எல்லையில் கடத்தல் சம்பவத்தில் ஈடுபட்ட இலங்கையர்கள் உட்பட 12 பேர் கைது செய்யப்பட்டு, அவர்களிடம் இருந்து 9 லட்சம் ரூபாய் மதிப்பிலான கடத்தல் பொருட்கள் மீட்கப்பட்டுள்ளன.**

இராமநாதபுரம் மாவட்ட சுங்கத்துறை அதிகாரிகளுக்கு இலங்கையிலிருந்து படகு மூலம் தங்கம் கடத்தி வரப்படுவதாக கிடைத்த இரகசிய தகவலை அடுத்து நேற்று முன்தினம் மாலை சுங்கத்துறையினரால் இந்தியக் கடலோர காவல் படையினருடன் இணைந்து இந்திய இலங்கை சர்வதேச கடல் எல்லை பகுதியில் கடத்தல் தடுப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர்.

அப்போது சர்வதேச கடல் எல்லையில் இருந்து தூரத்தில் இந்திய கடற்பரப்பில் சந்தேகத்திற்கிடமான முறையில் நின்று கொண்டிருந்த 4 மீன்பிடி படகுகளையும் அதிலிருந்த 8 இலங்கை நபர்களிடமும் இந்திய கடலோர காவல் படையினர் விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர்.

விசாரணைகளின்போது அவர்கள் முன்னுக்கு பின் முரணாக பதில்களை அளித்ததால் அவர்களை கைது செய்த இந்திய கடலோர காவல் படை வீரர்கள் மண்டபம் தெற்கு மீன்பிடி துறைமுகம் அழைத்துச் செல்ல முடிவு செய்தனர்.

செல்லும்போது நடுக்கடலில் மண்டபம் மரைக்காயர் பட்டணத்தைச் சேர்ந்த நாட்டு படகை பிடித்து சோதனை செய்தபோது படகில் 35 மூட்டைகளில் 594 கிலோ சமையல் மஞ்சள் மற்றும் 300 கிலோ பதப்படுத்தப்பட்ட கடல் அட்டைகள் இருந்தது தெரியவந்ததையடுத்து அந்த படகையும் அதிலிருந்த நால்வர் என மொத்தமாக 12 பேரை கைது செய்து மண்டபம் தெற்கு மீன்பிடி துறைமுகத்திற்கு அழைத்து வந்தனர்.

பின்னர் அவர்களிடம் நடத்திய விசாரணையில் கடல் அட்டைகள் மற்றும் சமையல் மஞ்சள் மூட்டைகளை புத்தளம் மற்றும் கற்பிட்டிக்கு கடத்திச் சென்றபோது பிடிபட்டதாக ஒப்புக்கொண்டனர்.

தமிழகத்தில் இருந்து கடத்தி வரப்பட்ட கடத்தல் பொருட்களை பெற்று செல்வதற்காக 4 படகுகளில் இலங்கை நபர்கள் காத்திருந்ததும் விசாரணையில் தெரியவந்ததை அடுத்து தமிழகத்தை சேர்ந்த நால்வரையும் கடத்தல் பொருட்களுடன் ராமநாதபுரம் சுங்கத்துறை அதிகாரிகளிடம் ஒப்படைக்கபட்டனர்.

மேலும் இலங்கையைச் சேர்ந்த நான்கு படகையும் அதிலிருந்து எட்டு நபர்களையும் மண்டபம் நீரியல் காவல் நிலையத்தில் ஒப்படைத்தனர்.

(அ)

# தமிழகத்தில் அதிகரிக்கும் டெங்கு!

## மருத்துவமனைகளை தயார் நிலையில் வைக்க வேண்டும்

சென்னை, ஒக். 26

அனைத்து மருத்துவமனைகளிலும் டெங்கு காய்ச்சலுக்கு சிகிச்சையளிக்க சிறப்பு வார்டுகளையும், படுக்கை வசதிகளையும் தயார் நிலையில் வைத்திருக்க பொது சுகாதாரத் துறை இயக்குநர் செல்வவிநாயகம் அறிவுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக மாவட்ட சுகாதார அலுவலர்களுக்கு அவர் அனுப்பிய சுற்றறிக்கையில்-

தமிழகம் முழுவதும் பரவலாக மழை பெய்து வருகிறது. இதனால், டெங்கு காய்ச்சலை பரப்பும் ஏடிஸ் வகை கொசுக்களின் உற்பத்தியும், டெங்கு காய்ச்சல் பாதிப்பும் அதிகரித்துள்ளது. நடப்பாண்டில் இந்தியா மட்டுமல்லாது பல்வேறு நாடுகளிலும் டெங்கு காய்ச்சல் தீவிரமடைந்துள்ளது.

எல் நினோ எனப்படும் கடல் வளிமண்டல சுழற்சி மாற்றங்கள் காரணமாக டெங்கு உள்ளிட்ட தொற்றுகள் அதிகரிக்கக் கூடும் என உலக சுகாதார நிறுவனம் எச்சரித்துள்ளது. அதனால், தமிழகத்தில் செப்டம்பர் முதல் நவம்பர் மாதம் வரை கொசுக்களால் தீவிரமாக பரவ வாய்ப்புள்ள நோய்களை தடுக்க பல்வேறு நடவடிக்கைகளை எடுக்க வேண்டியுள்ளது.

அதன்படி, மாநிலம் முழுவதும் மருத்துவக் கண்காணிப்பை தீவிரப்படுத்த வேண்டும். குறிப்பாக வீடுகள்தோறும் மருத்துவக் கண்காணிப்பை முன்னெடுக்க வேண்டும். கொசு ஒழிப்பு நடவடிக்கைகளை நகர்ப்புறங்களிலும், கிராமப்புறங்களிலும் விரிவுபடுத்துத்த வேண்டும்.

எந்த மாதிரியான சூழ்நிலையையும் எதிர்கொண்டு சிகிச்சை அளிக்கும் வகையில் மருத்துவமனைகளில் டெங்கு வார்டுகளையும், படுக்கைகளையும் அமைத்து போதிய மருத்துவ வசதிகளை தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும். ரத்த வங்கிகளையும் தயார் நிலையில் வைத்திருப்பதுடன் போதிய அலகு ரத்தத்தை இருப்பில் வைத்திருக்கவேண்டும்- என கூறியுள்ளார்.

(அ)

# முன்னாள் முதல்வர் கருணாநிதி குறித்து அவதூறாகக் கார்ட்டூன்!

## நாம் தமிழர் நிர்வாகி கைது

சென்னை, ஒக். 26

முன்னள் முதல்வர் கருணாநிதி குறித்து அவதூறாக கார்ட்டூன் வெளியிட்ட நாம் தமிழர் கட்சியை சேர்ந்த வீரபாண்டி குமரேசன் என்பவரை பொலிஸார் கைது செய்தனர். கருணாநிதி குறித்து அவதூறாக கார்ட்டூன் வெளியிட்டது குறித்து தட்டி கேட்ட தி.மு.க நிர்வாகிக்கு கொலை மிரட்டல் விடுத்ததாகவும் புகார் எழுந்துள்ளது.

தமிழக முன்னாள் முதல்வர் கருணாநிதி பற்றி சமூக வலைதளங்களில் குமரேசன் என்பவர் அவதூறாக கார்ட்டூன் பதிவிட்டதாக கூறப்படுகிறது.

இதை பார்த்த திமுகவினர் அதிர்ச்சி அடைந்து அவரிடம் கேள்வி எழுப்பினர். அப்போது முருகேசன் என்பவரை அவர் கொன்றுவிடுவதாக மிரட்டினாராம்.

இதையடுத்து கருங்கல்பட்டியை சேர்ந்த 56-வது வார்டு தி.மு.க. செயலாளர் முருகேசன் செவ்வாய்பேட்டை பொலிஸில் புகார் அளித்தார். புகாரின் பேரில் பொலிஸார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வந்தனர். விசாரணையில் அவர் சேலம் தாதகாப்பட்டியை சேர்ந்த குமரேசன் (வயது-49) என்பதும் இவர் இவர் நாம் தமிழர் கட்சியில் தெற்கு தொகுதி முன்னாள் துணை தலைவராக இருந்து உள்ளார் என்பதும் தெரிய வந்தது.

விசாரணைக்கு பிறகு நாம் தமிழர் கட்சி நிர்வாகி குமரேசன் கைது செய்தனர். இந்த சம்பவம் நாம் தமிழர் கட்சியினர் இடையே பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. (அ)

# நாடா, அமைச்சுப் பதவியா முக்கியம்? மொட்டு தான் முடிவெடுக்கவேண்டும்

## பதிலடி கொடுக்கின்றது ஐ.தே.க.



**கொழும்பு. ஒக். 26**

**“ரணில் விக்கிரமசிங்க வலிந்துசென்று, மொட்டு கட்சியிடம் எந்தவொரு பதவியையும் கேட்கவில்லை. அக்கட்சியினரே பதவிகளை ஏற்குமாறு கோரினர். எனவே, நாடா, அமைச்சு பதவியா என்பது குறித்து அக்கட்சியே முடிவெடுக்க வேண்டும்.” - என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச்செயலாளர் பாலித ரங்கே பண்டார தெரிவித்தார்.**

சுகாதார அமைச்சு பதவியில் இருந்து கெஹலிய ரம்புக்வெல்ல நீக்கப்பட்டுள்ள விவகாரம் தொடர்பில் மொட்டு கட்சி அதிருப்தியை வெளியிட்டுள்ளது. அத்துடன், மொட்டு கட்சிக்குரிய அமைச்சு பதவியை சுதந்திரக் கட்சிக்கு வழங்கிய ஜனாதிபதியின் முடிவு தவறு எனவும் அக்கட்சி சுட்டிக்காட்டியுள்ளது.

இது தொடர்பில் எழுப்பட்ட கேள்விக்கு பதிலளித்த பாலித ரங்கே பண்டார,

“ஜனாதிபதி பதவியை ரணில் விக்கிரமசிங்க பலவந்தமாக பெறவில்லை. வெற்றிவை வைத்து எவரிடமும் கையேந்தவும் இல்லை. அவர்கள் (மொட்டு கட்சியின்) தாமாக அழைத்தே எமது ஜனாதிபதிக்கு பதவிகளை வழங்கினர். ஆக நாடா, அமைச்சு பதவியா என்பது குறித்து அக்கட்சியின் முடிவெடுக்க வேண்டும்.” - என்றார்.

(அ)

# பெண்களுக்கு இரவுப் பணி அமைச்சரவை அங்கீகாரம்

கொழும்பு, ஒக். 26

தகவல் தொழிநுட்பத்தை அடிப்படையாகக் கொண்டு வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்கின்ற நிறுவனங்கள், அறிவுச் செயன்முறையை வெளியிலிருந்து வழங்கும் நிறுவனங்கள், வியாபாரச் செயன்மறையை வெளியிலிருந்து நிறுவனங்கள் மற்றும் வேறு நாடுகளில் அமைந்துள்ள வியாபார நிறுவனங்களுக்கான கணக்கு, நிர்வாகம் மற்றும் தொழிநுட்ப நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற அலுவலகங்களில் பணி புரிகின்ற பெண்களுக்கு இரவு வேளைகளில் பணியாற்றுவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அதற்கான இயலுமை கிட்டும் வகையில் 1954 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க கடை காரியாலய ஊழியர்கள் தொடர்பான (ஊழியர் மற்றும் வேதனங்கள் முறைப்படுத்தல்) சட்டத்தைத் திருத்தம் செய்வதற்காக 2023.08.08 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, சட்டவரைஞரால் தயாரிக்கப்பட்டுள்ள கடை காரியாலய ஊழியர்கள் தொடர்பான சட்டமூலத்திற்காக சட்டமா அதிபரின் ஒப்புதல் கிடைக்கப்பெற்றுள்ளது.

குறித்த சட்டமூலத்தை அரச வர்த்தமானியில் வெளியிடுவதற்கும், பின்னர் பாராளுமன்ற அங்கீகாரத்திற்காக சமர்ப்பிப்பதற்காகவும் தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

(அ)

# மாடுகள் திருடினால் இனிமேல் ரூ.1 மில்லியன் வரை அபராதம்

கொழும்பு, ஒக். 26

மாடு திருடினால் விதிக்கப்படும் அபராதத்தை ஒரு மில்லியன் ரூபாவாக அதிகரிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

விலங்குகள் நலச்சட்டத்தின் கீழ் விதிக்கப்பட்டுள்ள அபராதம் 50,000 ரூபா எனவும், அது போதாது என்பதால் உரிய அபராதத்தை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் விவசாயம், பெருந்தோட்டத் துறை, கால்நடை மற்றும் மீன்பிடி அமைச்சர் மஹிந்த அமரவீர குறிப்பிட்டார்.

ஒரு வருடம் கடின உழைப்புடன் கூடிய சிறைத்தண்டனை விதிப்பது தொடர்பாக விலங்குகள் நலச் சட்டத்தில் உட்பிரிவுகளைச் சேர்க்குமாறு அதிகாரிகளுக்கு அமைச்சர் அறிவுறுத்தியுள்ளார். (அ)

# 77,000 இற்கும் அதிகமான சுற்றுலாப்பயணிகள் இந்த மாதம் முதல் மூன்று வாரங்களில் வருகை

கொழும்பு, ஒக். 26

ஒக்ரோபர் மாதத்தின் முதல் மூன்று வாரங்களில் 77,000 இற்கும் அதிகமான சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர்.

இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையினால் வெளியிடப்பட்ட தரவுகளின் படி, இந்த மாதம் 77,763 வெளிநாட்டு சுற்றுலாப்பயணிகள் நாட்டிற்கு வந்துள்ளனர்.

ஒக்ரோபர் மாதத்திலும் 20,369 இந்திய பிரஜைகள் வந்துள்ளதால், இந்தியாவில் இருந்து வரும் பார்வையாளர்கள் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையில் தொடர்ந்து ஆதிக்கம் செலுத்துகின்றனர்.

இதற்கிடையில், ரஷ்யாவில் இருந்து 7,089 நபர்களும், ஐக்கிய இராச்சியத்திலிருந்து 6,287 பேரும், ஜேர்மனியில் இருந்து 4,923 பேரும், சீனாவில் இருந்து 4,711 பேரும், அவுஸ்திரேலியாவில் இருந்து 3,532 பேரும், மாலைதீவில் இருந்து 3,155 சுற்றுலாப் பயணிகளும் இந்த மாதம் இலங்கைக்கு வந்துள்ளனர்.

அதன்படி, இந்த வருடத்தில் இதுவரை 1,094,019 சுற்றுலாப் பயணிகள் நாட்டிற்கு வருகை தந்துள்ளனர். (அ)

# இலங்கையில் அறுவடை செய்யப்படாத மீன்களையே இறக்குமதி செய்ய அனுமதி

## அமைச்சர் டக்ளஸ் கூறுகிறார்

முல்லைத்தீவு, ஒக். 26

இலங்கையில் அறுவடை செய்யப்படாத மீன்களையே இறக்குமதி செய்ய அனுமதித்துள்ளதாக கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் நேற்று முன் தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சீனாவிடம் இருந்து மீன்கள் இறக்குமதி செய்யப்படுவது தொடர்பாக வெளியான தகவலில் உண்மைநிலை இருப்பது போல் தெரியவில்லை. என்னுடைய இராஜாங்க அமைச்சுக்கு தான் இலங்கை கடற்தொழில் கூட்டுதாபனத்தை கண்காணிக்கின்ற, செயற்படுத்துகின்ற பொறுப்பை கொடுத்திருக்கின்றேன். அவர் நேர்மையாக, நியாயமாக, சட்ட பூர்வமாக செய்ததாகத் தான் கூறுகின்றார்.

இலங்கை கடற்றொழிலாளர்களுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் இலங்கையில் மிக குறுகிய அளவில் அறுவடை செய்யப்படுகின்ற அல்லது அறுவடை செய்யப்படாத மீன்களை தான் இறக்குமதி செய்ய வேண்டும் என இலங்கை கடற்தொழில் கூட்டுஸ்தாபனத்திற்கு பணிப்புரை விடுத்திருந்தேன்.

நியாயமான விலையில், தரமானதாக, திணைக்களத்தின் சட்ட திட்டங்கள் உட்பட்டவையாக இருக்க வேண்டும்.



இவ்வாறே இறக்குமதி செய்ய முடியும் என கூறியிருக்கின்றேன். அந்தவகையில் தான் இறக்குமதி செய்ததாக கூறுகிறார்கள். அதில் முறைகேடு இருப்பதாக எனக்கு தெரியவில்லை. அவ்வாறு இருக்குமாக இருந்தால் நிச்சயம் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். ஆனால் ஊடகங்களில் தவறான செய்திகள் வெளிவந்துள்ளன. இது தொடர்பாக ஆராய்ந்து கொண்டிருக்கின்றேன்-என்றார்.

(அ)




# யாழ். விமான நிலையத்தில் வாணி விழா

யாழ்ப்பாணம், ஒக். 26

யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தில் நேற்று முன்தினம் சரஸ்வதி பூஜை வழிபாடுகள் இடம்பெற்றன.

விமான நிலைய அதிகாரிகளின் ஏற்பாட்டில் இடம்பெற்ற குறித்த பூசை வழிபாட்டில், விமான நிலையத்தில் பணியாற்றும் ஊழியர்கள், சுங்கத்துறையினர், விமான படையினர் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

(அ)

# அமெரிக்கத் தூதரகத்துக்கு சென்று திரும்பிய யாழ்ப்பாணத்து முதியவரைக் காணவில்லை!

யாழ்ப்பாணம், ஒக். 26

யாழ்ப்பாணத்திலிருந்து விசா அலுவல்கள் நிமித்தம் அமெரிக்க தூதரகத்திற்குச் சென்று அலுவல்களை நிறைவு செய்து விட்டு திரும்பிய முதியவரை கடந்த திங்கட்கிழமை முதல் காணவில்லை என உறவினர்கள் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

முதியவர் திங்கட்கிழமை கொழும்பில் அமைந்துள்ள அமெரிக்க தூதரகத்திற்கு சென்று அங்கு விசா அலுவல்களை நிறைவு செய்துவிட்டு ஆட்டுப்பட்டித் தெருவில் உள்ள விடுதி ஒன்றிற்கு உறவினர்களுடன் திரும்பினார்.

பின்னர், முதியவர் அன்று பிற்பகல் 3 மணியளவில் கடைக்குச் செல்வதாக தெரிவித்து விடுதியிலிருந்து புறப்பட்டவர் இதுவரை காணவில்லை என பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இவர் தொடர்பில் தகவல் தெரிந்தவர்கள் 0774354409 எனும் தொலைபேசி இலக்கத்திற்கு அறிவிக்குமாறும் உறவினர்களால் கோரப்பட்டுள்ளது.

# சுகாதாரத்துறையில் அதிரடி மாற்றங்கள்!

## புதிய நியமனம் பெற்ற அமைச்சர் உறுதி

கொழும்பு, ஒக். 26

**சுகாதாரத்துறையின் கொள்கைகள் மற்றும் தனிநபர்களின் அடிப்படையில் சில முக்கியமான மாற்றங்களைச் செய்ய இருப்பதாக புதிதாக நியமனம் பெற்றுள்ள சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரன தெரிவித்தார்.**

**சுகாதார அமைச்சராக கடமைகளை பொறுப்பேற்ற பின்னர் சுகாதார அமைச்சில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.**

**அவர் மேலும் தெரிவிக்கையில்-**



இலங்கையின் சுகாதாரத் துறை அண்மைய பொருளாதார நெருக்கடியால் பல சவால்களை எதிர்கொண்டுள்ளது.

அதன்படி, சுகாதாரத் துறையில் ஏற்பட்ட பல பிரச்சினைகள் தீர்க்கப்பட்டாலும், சரிசெய்யப்பட வேண்டிய பிரச்னைகள் நிறைய இருக்கின்றன. எனவே, இந்த பிரச்னைகளைத் தீர்ப்பதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள அனைவரையும் ஒத்துழைக்கவேண்டும்.

மேலும், தேவையான துறைகளில் பொருத்தமான மாற்றங்களை மேற்கொள்ள உறுதியாக உள்ளேன். நீண்ட காலத்திற்குத் தேவையான கட்டமைப்பு மற்றும் தனிப்பட்ட மாற்றங்கள் இரண்டையும் மேற்கொள்ளவுள்ளேன்-என்றார்.

மேலும், அண்மைக்காலங்களில் போதைப்பொருள் பாவனையினால் உயிரிழந்தவர்களுக்கு உரிய இழப்பீடுகளை வழங்குவதற்கு என்ன நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளது என அவரிடம் வினவப்பட்ட போது, குறித்த சம்பவங்கள் தொடர்பில் ஆராய தனக்கு இன்னும் சிறிது கால அவகாசம் தேவை என அமைச்சர் கூறினார்.

தவிரவும், சுகாதாரத் துறைக்கு சவாலாக உள்ள ஒவ்வொரு விஷயத்திலும் நான் கவனம் செலுத்துவேன் என்றும் அதற்கேற்ப தீர்வுகளை எடுப்பேன் என்று நான் உத்தரவாதம் அளிக்கிறேன் என்றும் பத்திரன குறிப்பிட்டார். (அ)

# ஒருமுறை மட்டும் எமக்கு அதிகாரத்தை வழங்குங்கள்

## கோருகின்றார் அநுரகுமார



கொழும்பு, ஒக். 26

அரசாங்கத்தின் அதிகாரத்தை தேசிய மக்கள் சக்திக்கு ஒரு முறை வழங்குமாறு அக்கட்சியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஐந்தாண்டு காலத்துக்கு அதிகாரம் வழங்க வேண்டும் என்றும், எடுத்த முடிவு தவறாக இருந்தாலும் வருந்தக்கூடாது என்றும் அவர் கூறினார்.

தேசிய மக்கள் சக்தியினால் நடத்தப்பட்ட மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

எழுபத்தைந்து ஆண்டுகளாக தவறான முடிவுகள் எடுக்கப்பட்டதால், மீண்டும் ஐந்தாண்டு சோதனைக்கான நேரம் வந்துவிட்டது.

தற்போதுள்ள அமைப்பை மாற்றுவதற்கு நம்பக்கூடிய ஒரே இயக்கம் தேசிய மக்கள் சக்தி என்றும் அவர் சுட்டிக் காட்டினார். (அ)

# மின்சார சபையை தனியாருக்கு விற்பனை செய்ய அரசு முயற்சி

## மின்சார நுகர்வோர் சங்கம் குற்றச்சாட்டு

கொழும்பு, ஒக். 26

மின்சார சபை மறுசீரமைப்பு என்ற பெயரில் மின்சார சபையை தனியாருக்கு விற்பனை செய்ய அரசாங்கம் முயற்சிப்பதாக மின்சார நுகர்வோர் சங்கம் குற்றம் சுமத்தியுள்ளது.

18 வீதத்தால் மூன்றாவது முறையாகவும் மின் கட்டணம் அதிகரிக்கப்பட்மைக்கு எதிர்ப்பு தெரிவித்து நாட்டின் பல பகுதிகளிலும் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுவரும் நிலையிலேயே குறித்த குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

இதன்போது வருடத்தில் மூன்றாவது முறையாக மின் கட்டணத்தை அதிகரித்தமைக்கு எதிர்ப்பு தெரிவித்த போராட்டக்காரர்கள், பொதுமக்கள் நெருக்கடியில் இருக்கும்போது அரசாங்கம் முன்னெடுக்கும் இச்செயல் அபத்தமானது என்றும் இச்செயல் தொடர இடமளிக்கக் கூடாது என்றும் வலியுறுத்தி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

# பாலியல் காட்சிகளை இணையத்தில் விற்பனை செய்யும் இலங்கையர்கள்!

கொழும்பு, ஒக். 26

இலங்கையர்கள் பலர் சிறு குழந்தைகளின் பாலியல் காட்சிகள் அடங்கிய காணொளிகளை சமூக ஊடகங்களில் விற்பனை செய்வதாக சிறுவர்கள் தொடர்பான சர்வதேச அமைப்பு ஒன்று செய்த முறைப்பாட்டையடுத்து விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக சிறுவர் மற்றும் பெண்கள் பணியகம் கொழும்பு மேலதிக நீதவான் கெமிந்த பெரேராவிடம் அறிவித்தது.

சர்வதேச அமைப்பு முறைப்பாடு ஒன்றை சமர்ப்பித்துள்ளதாகவும், வட்ஸ்அப் குழுவில் அங்கம் வகிக்கும் பல இலங்கையர்கள் மற்றும் சிறு குழந்தைகளின் நிர்வாண புகைப்படங்கள் மற்றும் வீடியோக்களை விநியோகிக்கும் இலங்கையர்கள் தொடர்பில் உடனடியாக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட வேண்டுமெனவும் மகளிர் பணியகம் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளது.

இந்த வாட்ஸ்அப் குரூப் மூலம் இரண்டு முதல் ஏழு வயதுக்குட்பட்ட ஆண், பெண் குழந்தைகளின் நிர்வாண புகைப்படங்கள், பாலியல் செயல்பாடுகள், ஆபாச காட்சிகள் உள்ளிட்ட வீடியோக்கள் ரூ.1000 , ரூ.2000, ரூ.3000 என விற்கப்படுவதாக முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் காணொளிகளில் இலங்கைச் சிறுவர்களும், சந்தேகநபர்களும் இருக்கிறார்களா என்பது குறித்து விசாரணை செய்வதற்கு தேவையான உத்தரவுகளை பிறப்பிக்குமாறு சிறுவர் மற்றும் பெண்கள் பணியகம் நீதிமன்றத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது.

உரிய கோரிக்கைகளுக்கு உத்தரவு பிறப்பித்த நீதிமன்றம், விசாரணைகளை நடத்தி உடனடியாக நீதிமன்றத்தில் அறிக்கை அளிக்குமாறு பணியகத்துக்கு உத்தரவிட்டது. (அ)

# மனைவி, பிள்ளையை கத்திமுனையில் 100 கிலோமீற்றர் பாதயாத்திரை அழைத்து சென்ற படைச் சிப்பாய் கைது!

கொழும்பு, ஒக். 26

தனது மனைவியையும் ஏழு வயது பிள்ளையையும் கத்தியை காட்டி கொலை மிரட்டல் விடுத்து, பேருந்திலும் நடைபயணமாகவும் பல இடங்களுக்கு வலுக்கட்டாயமாக அழைத்துச் சென்ற 38 வயதுடைய இராணுவ சார்ஜன்ட் ஒருவரை கடந்த திங்கட்கிழமை ஹசலக பொலிஸார் கைது செய்தனர்.

இந்த இராணுவ சார்ஜன்ட் தனது மனைவி மற்றும் குழந்தையுடன் தம்புள்ளை லெனடோர பிரதேசத்தில் வசித்து வந்துள்ளார்.

சந்தேகநபர் ஞாயிற்றுக்கிழமை தம்புள்ளையில் உள்ள வீட்டில் இருந்து தனது குடும்பத்தை வலுக்கட்டாயமாக அழைத்துச் சென்றுள்ளதாக ஹசலக்க பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

முதலில் தனது மனைவியையும் பிள்ளையையும் தம்புள்ளையில் இருந்து கண்டிக்கு அழைத்துச் சென்றுள்ளார். பின்னர் இவர்களை பாதயாத்திரையாக பல இடங்களுக்கு அழைத்துச் சென்று பின்னர் திங்கட்கிழமை கண்டியில் இருந்து பஸ் மூலம் ஹசலக்கவுக்கு அழைத்து வந்துள்ளார்.

இது குறித்து சார்ஜன்ட்டின் மனைவி ஹசலக்க பொலிஸ் அதிகாரி ஒருவரிடம் கூறியதையடுத்து, இந்த இராணுவ சார்ஜன்ட் கைது செய்யப்பட்டு அவரது பிடியில் இருந்து அவரது மனைவியும் குழந்தையும் விடுவிக்கப்பட்டனர். அவரது குடும்பத்தினரை மிரட்ட பயன்படுத்திய கத்தியும் கைப்பற்றப்பட்டது.

அப்போது அவர்கள் 100 கிலோமீற்றர் தூரம் பயணித்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

நுவரெலியாவில் உள்ள இராணுவ முகாமில் கடமையாற்றும் இந்த இராணுவ வீரர் மனநலம் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்தவர் எனத் தெரியவந்துள்ளது.

சமீபகாலமாக உரிய சிகிச்சை அளிக்காததால் இந்த நிலைக்கு வந்துள்ளதாக தெரிகிறது என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சார்ஜென்டை மஹியங்கனை நீதிமன்றில் ஆஜர்படுத்தி சிகிச்சைக்காக மனநல வைத்தியசாலைக்கு அனுப்புமாறு கோரவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

(அ)

# ஆசிய அபிவிருத்தி வங்கி இலங்கைக்கு 100 மில்லியன் டொலர்கள் கடன் உதவி!

கொழும்பு, ஒக். 26

இலங்கைக்கு 100 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்குவதாக ஆசிய அபிவிருத்தி வங்கி தெரிவித்துள்ளது.

சிறு மற்றும் நடுத்தர வணிகங்களுக்கு ஆதரவளிக்கும் வகையிலான புதிய திட்டமொன்றை ஆரம்பிப்பதற்காக குறித்த நிதி பயன்படுத்தப்படுமென அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இலங்கையில் தொடரும் பொருளாதார நெருக்கடிகள் காரணமாக சிறு மற்றும் நடுத்தர வணிகங்கள் பாரியளவில் பாதிக்கப்பட்டுள்ளன.

இதனால் குறித்த தரப்பினருக்கு உதவும் வகையில் ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியுடன் புதிய திட்டமொன்றை நடைமுறைப்படுத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இந்த திட்டத்தின் நடைமுறைக்காக 100 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியை வழங்க வங்கி இணங்கியுள்ளதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.

அத்துடன், ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன் சிறு மற்றும் நடுத்தர வணிகர்களுக்கு மானிய வட்டி விகிதத்தில் முதலீடு மற்றும் செயற்பாட்டு மூலதனக் கடன்களை வழங்குவதற்காக அரசாங்கம் சிறு மற்றும் நடுத்தர நிறுவன கடன் திட்டத்தை நடைமுறைப்படுத்தியுள்ளது.

மேலும், பணப்புழக்க அடிப்படையிலான கடன்களை விட, பிணை அடிப்படையிலான கடன்களுக்கு வங்கிகள் முன்னுரிமை அளிப்பதால், சிறு மற்றும் நடுத்தர தொழில் வணிகர்கள் எதிர்நோக்கும் பிரச்சனைகளுக்குத் தீர்வாக, தேசிய கடன் பாதுகாப்பு முகாமையை நிறுவ தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக அரசாங்கம் சுட்டிக்காட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# கூட்டணி அரசியல் தொடர்பில் ரணிலுக்கு புரிந்துணர்வு தேவை

## வலியுறுத்துகின்றார் நாமல் ராஜபக்ஷ

**கொழும்பு, ஒக். 26**

**கூட்டணி அரசியல் குறித்து ஜனாதிபதிக்கு சிறந்த புரிந்துணர்வு அவசியம் என பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.**

அமைச்சரவை மாற்றங்கள் மூலம் பிரச்னைகளுக்கு தீர்வை காணமுடியாது எனவும் அவர் கூறினார்.

ஜனாதிபதி கூட்டணிக் கட்சிகளின் தலைவர்களுடன் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டு கட்சிகள் மத்தியில் அமைதியை பேணவேண்டும் என தெரிவித்துள்ள நாமல் ராஜபக்ஷ, நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில் இரண்டு தலைவர்களும் வெவ்வேறு திசையில் சென்றனர். இதனால் நாடு ஸ்திரமின்மைக்குள் தள்ளப்பட்டது எனவும் தெரிவித்தார்.

எதிர்காலத்தில் தீர்மானங்களை எடுக்கும்போது ஜனாதிபதி கூட்டணி கட்சித் தலைவர்களுடன் கலந்தாலோசிக்கவேண்டும் என அவருக்கு ஆலோசனை வழங்குவதாகவும் நாமல் குறிப்பிட்டார்.

சில நாட்களுக்கு முன்னர் இடம்பெற்றதை அமைச்சரவை மாற்றம் எனக் கருதமுடியாது. சில துறைகள் மாற்றப்பட்டுள்ளன எனத் தெரிவித்துள்ள



நாமல், அமைச்சரவையில் மாற்றத்தை மேற்கொள்வதற்கான உரிமை ஜனாதிபதிக்கு உள்ளது. அதேவேளை இது குறித்து கூட்டணியில் உள்ள சக கட்சிகளுடன் பேசவேண்டிய கடப்பாடு ஜனாதிபதிக்குள்ளது எனவும் கூறினார்.

(அ)

# செப்ரெம்பர் மாதத்தில் மட்டும் நாட்டில் 168 பாலியல் துஷ்பிரயோக சம்பவங்கள்



கொழும்பு, ஒக். 26

நாட்டில் இவ்வருடத்தில் கடந்த செப்ரெம்பர் மாதத்தில் மாத்திரம் 16 வயதுக்குட்பட்ட சிறுமிகள் மீதான 168 பாலியல் துஷ்பிரயோக சம்பவங்கள் பதிவாகியுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் எரான் விக்ரமரத்ன தெரிவித்தார்.

இதனை கொழும்பு மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

168 பாலியல் துஷ்பிரயோக சம்பவங்களில் 22 பேர் கர்ப்பம் தரித்துள்ளார்கள்.

சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் தரவுகளின்படி, 2021 ஆம் ஆண்டில் இலங்கையில் மொத்தம் 11,000 சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

2022 ஆம் ஆண்டில் சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்களில் குறைந்தது 41 சதவீதம் பாலியல் துஷ்பிரயோகங்களின் கீழ் பதிவாகியுள்ளன.

இவ்வருடத்தில் செப்ரெம்பர் மாதத்தில் பதிவான சம்பவங்களின் எண்ணிக்கையுடன் ஒப்பிடும் போது அதிகரித்து காணப்படுகிறது-என்றார்.

(அ)

# பிக்குவை கைது செய்ய உத்தரவு

கொழும்பு, ஒக். 26

சர்ச்சைக்குரிய கருத்தை வெளியிட்டார் எனும் குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்ட ராஜாங்கனை சத்தா ரதன தேரரை கைது செய்யுமாறு கோட்டை நீதவான் திலின கமகே உத்தரவிட்டுள்ளார்.

இந்த உத்தரவானது நேற்று பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மதங்களுக்கு இடையில் முரண்பாடான கருத்துக்களை பரப்பினார் எனும் குற்றச்சாட்டில் குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் கடந்த மே மாதம் 29 ஆம் திகதி ராஜாங்கனை சத்தா ரத்தன தேரர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்.

அதனை தொடர்ந்து கடந்த ஜூலை 12 ஆம் திகதி பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தார்.

குறித்த வழக்கு தொடர்பில் விசாரணைக்கு அழைக்கப்பட்ட போது நீதிமன்றில் முன்னிலையாகாத காரணத்தால் நீதவான் பிடியாணை உத்தரவை பிறப்பித்துள்ளதாக கூறப்படுகிறது.

மேலும், தேரரின் வெளிநாட்டுப் பயணத்தை தடை செய்து, குடிவரவு குடியகல்வுக் கட்டுப்பாட்டாளர் நாயகத்துக்கு அனுப்பி வைக்குமாறும் உத்தரவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(அ)

# டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும்

கொழும்பு, ஒக். 26

நிலவும் மழையுடனான வானிலையால் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கக்கூடும் என தேசிய டெங்கு ஒழிப்பு பிரிவு குறிப்பிட்டுள்ளது.

13 சுகாதார வைத்திய அதிகாரிகள் பிரிவினை சேர்ந்த பகுதிகள் டெங்கு அதி அபாய வலயமாக காணப்படுவதாக தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவின் பணிப்பாளர் விசேட வைத்திய நிபுணர் மருத்துவர் நளின் ஆரியரத்ன குறிப்பிட்டார்.

வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 67,051 டெங்கு நோயாளர்கள் அடையாளங் காணப்பட்டுள்ளனர்.

இதனிடையே, இந்த மாதத்தில் மாத்திரம் 2,568 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். (அ)

# பொலிஸ் காவலில் சந்தேக நபர்கள் உயிரிழப்பது குறித்து விசாரணை!



கொழும்பு, ஒக். 26

பொலிஸாரின் பொறுப்பில் இருக்கும்போது சந்தேகநபர்கள் உயிரிழக்கும் சம்பவங்கள் தொடர்பில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவால் விசாரணைகளை ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கடந்த காலத்தில் இவ்வாறான 20 இற்கும் அதிகமான சம்பவங்கள் பதிவாகியுள்ளதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஆணையாளர், சட்டத்தரணி நிமல் புஞ்சிஹேவா தெரிவித்தார்.

அதற்கமைய, கைது செய்யப்பட்டுள்ள சந்தேகநபர்களை கையாள்வதற்கான விசேட அறிவுறுத்தல்களை தயாரிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

(அ)

# அரசு வழங்கிய வயல் காணிகளின் உரிமையைக் கோரிப் போராட்டம்!

## வன்னிவிளாங்குளம் விவசாயிகள் நடத்தினர்



முல்லைத்தீவு, ஒக். 26

ஒன்பது வருடங்களுக்கு முன்னர் பிரதேச செயலகத்தினால் விவசாய நடவடிக்கைகளுக்காக வழங்கப்பட்ட வயல் காணிகளுக்கு வழங்கப்பட்ட உறுதிப் பத்திரத்தின் அசல் ஆவணத்தைக் கோரி போரினால் பாதிக்கப்பட்ட வன்னி விவசாயிகள் கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமை முல்லைத்தீவு, பாண்டிக்குளம் சந்தியில் இருந்து மாந்தை கிழக்குப் பிரதேச செயலகம் வரை பேரணியாக வந்த வன்னிவிளாங்குளம் விவசாயிகள், 2014ஆம் ஆண்டு துவரன் குளத்தில் வயல் காணிகளை கையளித்து வழங்கப்பட்ட உறுதிப்பத்திரத்தின் அசல் ஆவணத்தை வழங்குமாறு பிரதேச செயலகத்திடம் கோரிக்கை விடுத்து கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

போராட்டத்தின் முடிவில் விவசாயிகளின் கோரிக்கைகள் அடங்கிய மனுவை உதவி பிரதேச செயலாளர் ஜெ.மயூரன் பெற்றுக்கொண்டதோடு, இது குறித்து உயர் அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு சென்று, நடவடிக்கை எடுப்பதாகவும் அவர் உறுதியளித்துள்ளார்.(அ)

# இஸ்ரேலில் விஸா இல்லாமல் தங்கியிருக்கும் இலங்கையர்களின் தகவல் திரட்டும் தூதரகம்

கொழும்பு, ஒக். 26

அங்கீகரிக்கப்பட்ட விஸா இல்லாமல் இஸ்ரேலில் தங்கியிருக்கும் இலங்கையர்களுக்கு விஸா வழங்குவதற்கு அங்கிருக்கும் இலங்கையர்களின் தகவல்களை திரட்டும் வேலைத்திட்டம் நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமை ஆரம்பிக்கப்பட்டதுடன், நேற்றும் இஸ்ரேலில் இருக்கும் இலங்கைத் தூதரகத்தில் இடம்பெற்றது என இஸ்ரேலுக்கான இலங்கை தூதுவர் நிமல் பண்டார தெரிவித்தார்.

இஸ்ரேலின் குடிவரவு குடியகல்வுப் பிரிவின் பணிப்பாளர் நாயகம் எயால் சிஸ்சோ உள்ளிட்ட அதிகாரிகள் சிலர் இலங்கை தூதரகத்துக்கு வந்து, தூதுவருடன் கலந்துரையாடியுள்ளனர்.

இதன்போது விஸா இல்லாமல் தாதியர் சேவையில் இருக்கும் ஊழியர்கள் மற்றும் ஏனைய பிரிவுகளில் இருக்கும் இலங்கையர்களுக்கு விஸா வழங்குமாறும் அதேபோன்று விஸா காலம் முடிவடைந்த பின்னரும் தொடர்ந்து இஸ்ரேலில் தங்கி இருக்கும் இலங்கையர்களின் விஸாவை புதுப்பிக்குமாறும் குடிவரவு குடியகல்வு பிரிவின் பணிப்பாளர் நாயகத்திடம் கோரிக்கை விடுத்ததாகவும் அவர் தெரிவித்தார்.

அத்துடன், தனது கோரிக்கைக்கு இஸ்ரேல் குடிவரவு குடியகல்வுப் பிரிவின் பணிப்பாளர் நாயகம் இணங்கியதாகவும் விஸா இல்லாமல் தங்கி இருக்கும் இலங்கையர்களின் தகவல்களை கோரியதாகவும் தூதுவர் குறிப்பிட்டார்.

அவ்வாறே விசா காலம் முடிவடைந்த பின்னரும் இஸ்ரேலில் தங்கி இருக்கும் இலங்கையர்களுக்கு விவசாயப் பிரிவில் தொழில் வாய்ப்பை பெற்றுக்கொடுப்பதற்கும் பணிப்பாளர் நாயகம் இணங்கியதாகவும் தூதுவர் நிமல் பண்டார தெரிவித்துள்ளதாக இஸ்ரேலில் இருக்கும் இலங்கை தூதரகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(அ)

# பாக்கு நீரிணையை நீந்திக் கடந்த சாரண மாணவர்களுக்கு கௌரவம்!







மட்டக்களப்பு, ஒக். 26

இந்தியாவின் தனுஷ்கோடிக்கும் இலங்கையின் தலைமன்னாருக்கு மிடையிலான 30 கிலோ மீற்றர் கடலை நீந்திக் கடந்து சாதனை நிலைநாட்டியுள்ள மட்டக்களப்பு புனித மைக்கேல் கல்லூரியின் மூன்று மாணவர்களுக்குமான வரவேற்பு மற்றும் கௌரவிப்பு கடந்த திங்கட்கிழமை இரவு மட்டக்களப்பு சிங்கிங் பிஸ், சுற்றுலா விடுதியில் நடைபெற்றது.

மட்டக்களப்பு கே.கே.சண்முகம் அறக்கட்டளையின் அனுசரணையில் அதன் ஸ்தாபகர் ச.சண்முகேசனின் ஏற்பாட்டில் நடைபெற்ற இவ் வரவேற்பு கௌரவிப்பு நிகழ்வில், சாதனை புரிந்த மாணவர்களுக்கு அரசியல்வாதிகளும், வர்த்தக பிரமுகர்கள், அமைப்புகளின் பிரதிநிதிகளும் நீச்சல் சாதனை புரிந்த மாணவர்கள் மற்றும் அவர்களது பெற்றோர்களுக்கும் தமது வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்தனர்.

இராஜாங்க அமைச்சர் சி. சந்திரகாந்தன், பாராளுமன்ற உறுப்பினர் கோ.கருணாகரம் (ஜனா), புனித மிக்கேல் கல்லூரியின் அதிபர் அன்ரன் பெனடிக் யோசப், முன்னாள் அதிபர் பயஸ் ஆனந்தராஜா, மட்டக்களப்பு மாவட்ட சாரண ஆணையாளர் விவேகானந்த பிரதீபன், மட்டக்களப்பு வர்த்தக சங்கத்தின் தலைவர் எம்.செல்வராசா, மட்டக்களப்பு தமிழ்ச் சங்கத்தின் தலைவர் எஸ்.ரஞ்சிதமூர்த்தி, மட்டக்களப்பு வர்த்தக சங்கத்தின் உப தலைவர் கலீல் ஹாஜியார் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

நிகழ்வின் வரவேற்புரையினை மட்டக்களப்பு மாவட்ட சாரண ஆணையாளர் விவேகானந்த பிரதீபன் நிகழ்த்தினார். தலைமையுரையினை புனித மிக்கேல் கல்லூரியின் அதிபர் அன்ரன் பெனடிக் யோசப்பும், தமது பிள்ளைகளின் சாதனைப் பயணம் குறித்த கருத்து, நன்றியுரையை சாதனை புரிந்த மாணவர்களின் தந்தையான புளோரிங்டன் வழங்கினார்.

மட்டக்களப்பு புனித மிக்கேல் தேசியப் பாடசாலையின் சிரேஷ்ட சாரண மாணவர்களான புளோரிங்டன் டயன்ஸ்ரித், புளோரிங்டன் டயன் பிறிடோ மற்றும் இருதயநாதன் கெல்வின் கிசோ ஆகிய மூவரும் கடந்த ஞாயிற்றுக்கிழமை அதிகாலை ஒரு மணியளவில் ஆரம்பித்த தமது சாதனைப் பயணத்தை முற்பகல் 10.30 மணியளவில் நிறைவு செய்திருந்தனர்.

கடலில் பிளாஸ்ரிக் பொருட்கள் கலப்பதனை தடுக்கும் நோக்கிலான விழிப்புணர்வினை ஏற்படுத்தும் வகையில் மேற்கொள்ளப்பட்ட இந்த நீச்சல் முயற்சியானது பாக்கு நீரிணையைக் கடந்து மேற்கொள்ளப்பட்டுள்ள ஆசியச் சாதனையை முறியடிக்கும் வகையில் மேற்கொள்ளப்பட்டது. அத்துடன், புனித மிக்கேல் கல்லூரியின் 150ஆவது ஆண்டு நிறைவையொட்டி நடைபெற்று வருகின்ற நிகழ்வுகளின் ஒரு அங்கமாகவும் இது அமைந்திருந்தது. (அ)




# காத்தான்குடி பிரதேச செயலக அலுவலர்களின் வாணி விழா

மட்டக்களப்பு, ஒக். 26

காத்தான்குடி பிரதேச செயலக உத்தியோகத்தர்களின் வாணி விழா பிரதேச செயலாளர் உ.உதயசிறிதர் தலைமையில் மஞ்சந்தொடுவாய் சிறி சித்தி விநாயகர் ஆலயத்தில் வெகு விமரிசையாக இடம்பெற்றது.

இவ் விழாவில் பிரதேச செயலக உத்தியோகத்தர்களின் பிள்ளைகளின் பல கலை நிகழ்வுகள் இடம்பெற்றதுடன் அவர்களது திறமைகளைப் பாராட்டி பிரதேச செயலாளரினால் பரிசில்கள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

# மண்முனை மேற்கு பிரதேச செயலகத்தில் தொழில் முயற்சியாளர்கள் ஊக்குவிப்பு



மட்டக்களப்பு, ஒக். 26

மண்முனை மேற்கு பிரதேச செயலகத்தில் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி பிரிவின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் திகதி பிரதேச செயலாளர் எஸ்.சுதாகர் தலைமையில் இடம் பெற்றது.

தொழில் முயற்சியாளர்களை கொண்டு அவர்களுக்கோர் சந்தைக் களத்தினை ஏற்படுத்தும் நோக்கோடு இடம்பெற்ற இந்நிகழ்வில் உதவி பிரதேச செயலாளர் திருமதி சுபா சதாகரன், திட்டமிடல் பணிப்பாளர் எஸ்.சபேசன் மற்றும் கணக்காளர் சுந்தரலிங்கம் உள்ளிட்ட உயரதிகாரிகள், உத்தியோகத்தர்கள் பொது மக்கள் என பலரும் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கந்தளாய் ஆதார வைத்தியசாலைக்கு இரத்த சுத்திகரிப்பு இயந்திரம் வழங்கல்



திருமலை, ஒக். 26

திருகோணமலை - கந்தளாய் ஆதார வைத்தியசாலைக்கு இரத்தம் சுத்திகரிக்கும் இயந்திரம் நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமை பாராளுமன்ற உறுப்பினர் கபில நுவன் அத்துக்கோரள தலைமையில் வழங்கப்பட்டது.

கந்தளாய், தம்பலகாமம், சேருவில போன்ற பிரதேச செயலகப் பிரிவுகளில் வசிக்கும் பெருந்தொகையான மக்கள் தமது பிரதான வைத்தியசாலையாக கந்தளாய் ஆரம்ப வைத்தியசாலையில் சிகிச்சை பெற வருகின்றனர். இவர்களில் சிறுநீரக நோய்க்கு சிகிச்சை பெற வரும் நோயாளிகள் கந்தளாய் வைத்தியசாலையில் இரத்தம் சுத்திகரிக்கும் இயந்திரம் இல்லாத காரணத்தினால் பொலனறுவை, அனுராதபுரம், திருகோணமலை போன்ற தூர வைத்தியசாலைகளுக்கு செல்லவேண்டியுள்ளது.

இந்நிகழ்வில், கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் திருமதி. ஜே.ஜே. முரளிதரன், மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# காத்தான்குடியில் ரன்விமன வீடமைப்புத் திட்டம் திறப்பு!

மட்டக்களப்பு, ஒக். 26

காத்தான்குடி பிரதேசத்தில் சமுர்த்தி ரன்விமன வீடமைப்பு மற்றும் காத்தான்குடி பள்ளிவாசல்கள், முஸ்லிம் நிறுவனங்கள், சம்மேளன ஸக்காத் நிதிய பங்களிப்புடன் கட்டி முடிக்கப்பட்ட வீடு கையளிக்கு நிகழ்வு இடம் பெற்றது.

வறுமை ஒழிப்பு வாரத்தை முன்னிட்டு இந்நிகழ்வு இடம் பெற்றது. இதில் பிரதம அதிதியாக சமுர்த்தி அபிவிருத்தி திணைக்கள மேலதிக பணிப்பாளர் நாயகம் திருமதி.ஆரிபா ஜபறுழ்ழா கலந்துகொண்டு ஆரம்பித்து வைத்தார்.

காத்தான்குடி பிரதேச செயலாளர் யூ உதய சிறீதர் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர் எஸ்.புவனேந்திரன், காத்தான்குடி பள்ளிவாயல்கள் முஸ்லிம் நிறுவனங்கள் சம்மேளன செயலாளர் ஏ. எல். எம்.



சபீல் (நளீமி), சம்மேளன உறுப்பினரும் ஓய்வு பெற்ற அதிபர்களுமான கே.எம் .எம்.சலீம் மற்றும் எம். சீ .எம் .ஏ .சத்தார், உதவிப் பிரதேச செயலாளர் திருமதி சில்மியா, கணக்காளர், சமுர்த்தி தலைமையக முகாமையாளர், வங்கி வலய முகாமையாளர்கள், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் மற்றும் சம்மேளன பிரதிநிதிகள் உள்ளிட்டோர் அதிதிகளாக கலந்து சிறப்பித்தனர்.

சமுர்த்தி நிதிய பங்களிப்புடன் ரூ. 750000 நிதியும் சம்மேளன பங்களிப்பில் ரூ. 750000 நிதியும் ஏனைய தனவந்தர்களின் நிதிப்பங்களிப்புடனும் இவ்வீடு கட்டி முடிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

## மாடுகளை வேட்டையாடி இறைச்சியாக்கி பாதுகாப்பு அதிகாரியொருவர் சிக்கினார்

திருமலை, ஒக். 26

வனவிலங்கு அதிகாரிகளின் கண்களில் மண்ணைத் தூவி மிக நீண்ட நாட்களாக மாடுகளை வேட்டையாடி அவற்றின் இறைச்சியை பொதியாக்கி தனது மனைவியின் வீட்டிலுள்ள குளிர்சாதனப் பெட்டியில் வைத்து விற்பனை செய்து வந்த தெஹியத்தக்கண்டிய சிவில் பாதுகாப்பு திணைக்கள பாதுகாப்பு உத்தியோத்தர் வனவிலங்கு பாதுகாப்பு அதிகாரிகளினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

வன விலங்கு பாதுகாப்பு திணைக்களத்திற்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் குளிர்சாதனப் பெட்டியில் தனித்தனியாக ஒவ்வொரு கிலோவாக பொதி செய்யப்பட்டிருந்த 7 கிலோகிராம் இறைச்சியை கைப்பற்றியுள்ளதுடன் சந்தேக நபரையும் கைது செய்துள்ளனர்.

# அன்ரனியோ குட்டரெஸ் பதவி துறக்கவேண்டும்!

## இஸ்ரேல் பகிரங்கக் கோரிக்கை

டெல் அவிவ், ஒக். 26

**ஐ.நாவின் பொதுச்செயலாளர் அன்ரனியோ குட்டரெஸ் இராஜினாமா செய்ய வேண்டுமென இஸ்ரேல் கோரிக்கை விடுத்துள்ளது.**

அண்மையில் ஐ.நா. பாதுகாப்புச் சபைக் கூட்டத்தில் உரையாற்றிய பொதுச்செயலாளர் அன்ரனியோ குட்டரெஸ்" பலஸ்தீனத்தின் காசா மீதான தனது தாக்குதலை இஸ்ரேல் நிறுத்திக்கொள்ள வேண்டும். காரணம் இல்லாமல் ஹமாஸ், இஸ்ரேல் மீது தாக்குதலை நடத்தவில்லை" எனத் தெரிவித்திருந்தார்.

இக்கருத்தானது உலகரங்கில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ள நிலையில் ஐ.நாவின் பொதுச்செயலாளர் அன்ரனியா குட்டரெஸ் உடனடியாகப் பதவி விலக வேண்டும் என இஸ்ரேல் கோரிக்கை விடுத்துள்ளது.

அத்துடன் இக் கருத்துகளுக்காக அவர் மன்னிப்பு கேட்க வேண்டும் எனவும் இஸ்ரேல் வெளியுறவு அமைச்சர் இலய் கோஹன் மற்றும் ஐ.நா.வுக்கான இஸ்ரேல் தூதர் கிலாட் இர்டான் வலியுறுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)




# இஸ்ரேலுக்கும் பிரான்ஸிற்கும் பயங்கரவாதம் பொது எதிரி!

## பிரான்ஸ் ஜனாதிபதி தெரிவிப்பு

டெல் அவிவ், ஒக். 26


பிரான்ஸ் அதிபர் இம்மானுவேல் மக்ரோன் நேற்று முன்தினம் இஸ்ரேல் சென்றடைந்தார்.



அவர் இஸ்ரேல் அதிபர் ஐசாக் ஹெர்சோவையும் பிரதமர் பெஞ்சமின் நெத்தன்யாகுவையும் சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

இதனையடுத்து செய்தியாளர்களிடம் பேசிய பிரான்ஸ் ஜனாதிபதி, ''இஸ்ரேலுக்கும் பிரான்ஸிற்கும் பயங்கரவாதம் பொது எதிரி. இதில் இஸ்ரேல் தனியாக இல்லை. ஐ.எஸ். பயங்கரவாதிகளுக்கு எதிராக ஒன்றிணைந்தவர்கள் ஹமாஸுக்கு எதிராகவும் ஒன்றிணைய வேண்டும்.

ஐ.எஸ்.ஐ.எஸ். பயங்கரவாதிகளுக்கு எதிரான போரில் உலக அளவில் ஒன்றிணைந்தது போல, ஹமாஸுக்கு எதிரான போரிலும் பிரான்ஸ் ஒன்றிணையும். பலஸ்தீன பிரச்னைக்கு அரசியல் ரீதியில் இஸ்ரேல் தீர்வு கண்டால் மட்டுமே மத்திய கிழக்கு பகுதியில் அமைதி, நிலைத்தன்மை ஏற்படும்,'' என தெரிவித்துள்ளார். (அ)

**'இஸ்ரேல் - பலஸ்தீன மோதல்';**

# அவுஸ்திரேலியாவில் திடீரென பள்ளிவாசல்கள் மீது தாக்குதல்

கான்பரா, ஒக். 26

இஸ்ரேல் - பலஸ்தீன மோதலையடுத்து அவுஸ்திரேலியாவில் அடிலெய்ட் பகுதியில் பள்ளிவாசல்கள்மீது நடத்தப்பட்டுள்ளது.

இந்த தாக்குதலை அவுஸ்திரேலிய வெளிவிவகார அமைச்சர் பென்னி வோங் கண்டித்துள்ளார்.

அத்துடன், இஸ்லாமியர்களுக்கு எதிரான நடவடிக்கைகளுக்கு எதிர்ப்பை வெளியிட அவுஸ்திரேலியர்கள் ஒன்றுபட வேண்டும் எனவும் அவர் அழைப்பு விடுத்துள்ளார்.

அடிலெய்ட் பகுதியில் கடந்த வாரம் பள்ளிவாசல்மீது தாக்குதல் நடத்தப்பட்டிருந்த நிலையில், வூட்வில் நோர்த் பகுதியில் உள்ள பள்ளிவாசல் மீது நேற்று முன்தினம் தாக்குதல் நடத்தப்பட்டது.

இந்த தாக்குதல் எரிவாயு சிலிண்டர் வீசப்பட்டு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இதனால் பள்ளிவாசல் சுவர் பகுதியளவு சேதமடைந்துள்ளது.

இது தொடர்பான தகவல்கள் தற்போதுதான் பொதுவெளியில் வெளியாகியுள்ளன.

இஸ்ரேல் - ஹமாஸ் மோதலால் அவுஸ்திரேலியாவில் உள்ளக பதற்ற நிலை அதிகரித்துள்ளது. பலஸ்தீன ஆதரவாளர்களுக்கும், யூத சமூகங்களுக்கும் இடையில் முறுகல் நிலை ஏற்பட்டுள்ளது. அத்துடன், அவுஸ்திரேலியாவில் முஸ்லிம் விரோத போக்கும் அதிகரித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

# காஸாவில் மிகத்தெளிவாக மீறப்படும் சர்வதேச மனிதாபிமானச் சட்டங்கள்!

## சாடுகின்றார் ஐ.நா. பொதுச் செயலாளர்

நியூயோர்க், ஒக். 26

ஐ.நா பொதுச்செயலாளர் அன்ரனியோ குட்டரெஸ் செவ்வாயன்று காசாவில் சர்வதேச சட்டத்தை மீறியதாக குற்றம் சாட்டினார். ஹமாஸ் தாக்குதல்களுக்கு பதிலளிக்கும் விதமாக பலஸ்தீனிய பிரதேசத்தில் இஸ்ரேல் தாக்குதல் நடத்துவதால் உடனடி போர்நிறுத்தத்தை வலியுறுத்தினார்.

பாதுகாப்புச் சபையின் உயர்மட்ட அமர்வுக்கு முன் ஐ.நா தலைவரின் வேண்டுகோளுக்கு இஸ்ரேல் கோபத்தை வெளிப்படுத்தியது. அங்கு பலஸ்தீனிய வெளியுறவு அமைச்சர் இரு தரப்பிலும் ஆயிரக்கணக்கானவர்களைக் கொன்று குவித்த மோதலில் செயலற்ற தன்மையைக் கண்டித்தார்.

அமர்வைத் தொடங்கி உரையாற்றிய குட்டரெஸ், ஒக்ரோபர் 7 அன்று ஹமாஸ் போராளிகளால் நடத்தப்பட்ட "பயங்கரமான" வன்முறைக்கு மன்னிப்பு இல்லை என்று கூறினார், ஆனால் பலஸ்தீனியர்களின் "கூட்டு தண்டனைக்கு" எதிராக எச்சரித்தார்.




"காசாவில் நாம் கண்டுவரும் சர்வதேச மனிதாபிமான சட்டத்தின் தெளிவான மீறல்கள் குறித்து நான் ஆழ்ந்த கவலை கொண்டுள்ளேன். நான் தெளிவாக இருக்க வேண்டும்: ஆயுத மோதலில் ஈடுபடும் எந்த தரப்பினரும் சர்வதேச மனிதாபிமான சட்டத்திற்கு அப்பாற்பட்டவர்கள் அல்ல," என்று குட்டரெஸ் இஸ்ரேலின் பெயரை வெளிப்படையாக குறிப்பிடாமல் கூறினார்.

பலஸ்தீனியர்கள் "56 ஆண்டுகளாக மூச்சுத் திணறல் ஆக்கிரமிப்புக்கு ஆளாகியுள்ளனர்" என்று குட்டரெஸ் பாதுகாப்பு சபையிடம் கூறினார்.

அவரது கருத்துக்கள் இஸ்ரேலிய வெளியுறவு அமைச்சர் எலி கோஹனை கோபப்படுத்தியது, அவர் குட்டரெஸின் கருத்துக்கு எதிர்ப்பு தெரிவித்தார். ஒக்ரோபர் 7 அன்று இஸ்ரேலிய வரலாற்றில் மிகக் கொடூரமான ஒற்றைத் தாக்குதலில் கொல்லப்பட்ட பொதுமக்களின் கணக்குகளை விவரித்தார். (அ)

# பாகிஸ்தான் விமான சேவையை தனியாருக்கு விற்கத் தீர்மானம்?

இஸ்லாமாபாத், ஒக். 26

நாட்டில் நிலவி வரும் எரிபொருள் பற்றாக்குறை காரணமாக பாகிஸ்தான் சர்வதேச விமான சேவை நிறுவனம் 77 விமானங்களின் சேவையை இரத்து செய்துள்ளது.

அதன்படி, பாகிஸ்தான் சர்வதேச விமானசேவை நிறுவனத்துக்கு எரிபொருள் வழங்கி வரும் பாகிஸ்தான் எண்ணெய் நிறுவனம், தனது விநியோகத்தை நிறுத்தியுள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.




பாகிஸ்தான் சர்வதேச விமானசேவை நிறுவனத்துக்கு வழங்கப்பட்ட எரிபொருளுக்கான தொகை அதிக அளவில் நிலுவையில் இருக்கும் காரணத்தினால், தொடர்ந்து எரிபொருள் வழங்குவது நிறுத்தப்பட்டுள்ளதாக பாகிஸ்தான் எண்ணெய் நிறுவனம் தெரிவித்துள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் சுட்டிக்காட்டுகின்றன.

இதன் காரணமாக தற்போது லாகூரில்இருந்து டொரோன்டோ, கோலாலம்பூர், இஸ்லாமாபாத்தில் இருந்து பெய்ஜிங், இஸ்தான்புல் ஆகிய 4 சேவைகள் மட்டுமே வழங்கப்பட்டு வருகிறது என பாகிஸ்தான் சர்வதேச விமான சேவை நிறுவனத்தின் செய்தித் தொடர்பாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், பாகிஸ்தான் சர்வதேச விமானசேவை நிறுவனம் 750 பில்லியன் ரூபாய் அளவுக்கு இழப்பைச் சந்தித்துள்ளதே அந்நாட்டின் கடன் தொகையை செலுத்த முடியாததற்குக் காரணம் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும், பாகிஸ்தான் சர்வதேச விமான சேவை நிறுவனம் தொடர்ந்து நட்டத்தில் இயங்கி வருவதால், அதனை தனியாருக்கு விற்க பாகிஸ்தான் அரசாங்கம் கடந்த மாதம் தீர்மானித்திருந்ததாகவும் வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன. (அ)

# ஆட்சியைக் கவிழ்க்கும் எண்ணம் பொதுஜன பெரமுனவிடம் இல்லை

## கூறுகின்றார் எஸ்.பி. திஸாநாயக்க



கொழும்பு, ஒக். 26

**பாதீட்டை தோற்கடித்து ஆட்சியைக் கவிழ்க்கும் எண்ணம் பொதுஜன பெரமுன கட்சியிடம் இல்லை என்று அக்கட்சியின் மூத்த பாராளுமன்ற உறுப்பினரான எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்தார்.**

பொதுஜன பெரமுன கட்சிக்கும், ஜனாதிபதிக்கும் இடையில் கருத்து மோதல் ஏற்பட்டுள்ளதால் பாதீட்டை எதிர்த்து தமது எதிர்ப்பை மொட்டு கட்சி வெளிப்படுத்தும் என தகவல்கள் வெளியாகின.

இந்நிலையிலேயே எஸ்.பி. திஸாநாயக்க மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு ,

வரவு - செலவுத் திட்டம் தொடர்பில் எவ்வாறு வாக்களிக்க வேண்டும் என்பது குறித்து கட்சி இன்னும் ஆராயவில்லை. பாதீட்டை தோற்கடித்து ஆட்சியைக் கவிழ்க்கும் எண்ணமும் எம்மிடம் இல்லை. கட்சிக்குள் எமது யோசனைகள் முன்வைக்கப்படும், அதன் அடிப்படையில் கட்சி எடுக்கும் முடிவில் அடிப்படையில் நாம் செயற்படுவோம். கட்சியின் முடிவுக்கு கட்டுப்படாவிட்டால் வெளியேறவேண்டும்.

அதேவேளை ஐக்கிய தேசியக் கட்சி, சுதந்திரக் கட்சி மற்றும் மொட்டு கட்சியில் இருந்து வெளியேறிய அணிகளுக்கு மக்கள் ஆதரவு இல்லை. அடுத்த தேர்தலில் ஒரு ஆசனத்தைக் கூட அந்த தரப்புகளுக்கு பெற முடியாத நிலை காணப்படுகின்றது. பிரதான கட்சிகளில்தான் தேர்தலுக்கு வர மேற்படி கட்சிகள் முற்படும்.

தேசிய மக்கள் சக்தி பக்கம் முழுமையாக மக்கள் அலை இல்லை. தேசிய மக்கள் சக்தியின் வாக்குவீதம் அதிகரித்துள்ளது உண்மைதான். அதாவது 2 வீதமாக இருந்தது 12 வீதமாகலாம். அதேபோல மொட்டு கட்சிக்கான மக்கள் ஆதரவும் அப்படியே தொடர்கின்றது- என்றார்.

(அ)

# தாதியர் 60 வயதில் ஓய்வு பெறவேண்டுமென தீர்மானத்தை இரத்துச் செய்தது நீதிமன்றம்!

கொழும்பு, ஒக். 26

அரச தாதியர் சேவையில் தரம் நான்கைச் சேர்ந்த தாதியர்கள் 60 வயதில் கட்டாயமாக ஓய்வுபெற வேண்டுமென மேற்கொள்ளப்பட்டுள்ள தீர்மானத்தை இரத்துச் செய்து மேன்முறையீட்டு நீதிமன்றம் கடந்த செவ்வாய்க்கிழமை உத்தரவு பிறப்பித்துள்ளது.

மேன்முறையீட்டு நீதிமன்றம் வழங்கிய உத்தரவில், ஏற்கனவே ஓய்வு பெற்ற அந்தந்த பதவிகளில் உள்ளவர்களையும் மீண்டும் பணியில் அமர்த்தவேண்டும் என்றும் தெரிவித்துள்ளது.

மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர் நீதிபதி நிஸங்க பந்துல கருணாரத்ன மற்றும் ஏ. மரிக்கார் ஆகியோர் அடங்கிய அமர்வு இந்த தீர்ப்பை வழங்கியது.

(அ)

# கோப்பாய் கலாசாலை மரியன்னை ஆலயத்தில் பெருநாள் திருப்பலி நாளை

யாழ்ப்பாணம், ஒக். 26

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் அமைந்துள்ள புனித மரியன்னை ஆலயத்தின் பெருநாள் திருப்பலி நாளை வெள்ளி காலை 9 மணிக்கு ஒப்புக்கொடுக்கப்படும்.

கலாசாலையின் கிறிஸ்தவ மன்ற ஏற்பாட்டில் இடம்பெறும் இந்நிகழ்வில் யாழ்.மறைக் கோட்ட முதல்வரும் யாழ். பேராலய பங்குத் தந்தையுமாகிய அருட்பணி ஜே.ஜே.மௌலீஷ் அடிகள் திருப்பலியை ஒப்புக் கொடுப்பார்.

கோப்பாய் பங்குத்தந்தை எம்.எல்.மொன்பேட் அடிகள், யாழ். மறைக்கல்வி நடுவு நிலைய இயக்குநர் டபிள்யூ.எக்ஸ். ஜேம்ஸ் அடிகள் ஆகியோர் பெருநாள் திருப்பலியில் கலந்து ஆசி வழங்குவர்.

(அ)

# பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் பிரிட்டன் தூதுவருடன் சந்திப்பு



கொழும்பு, ஒக். 26

இலங்கைக்கான பிரித்தானிய தூதுவர் ஜேம்ஸ் டோரிஸ், பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னக்கோனை சந்தித்து பேச்சு நடத்தினார்.

இந்த சந்திப்பு கொழும்பில் உள்ள பாதுகாப்பு இராஜாங்க அமைச்சில் நேற்று முன் தினம் நடைபெற்றது.

பாதுகாப்பு இராஜாங்க அமைச்சுக்கு வருகை தந்த பிரித்தானிய தூதுவரை இராஜாங்க அமைச்சர் தென்னக்கோன் வரவேற்றதுடன், முக்கிய விடயங்கள் குறித்தும் சிநேகபூர்வமாக கலந்துரையாடினார்.

நட்பு ரீதியான இந்த சந்திப்பின் போது இருதரப்பு முக்கியத்துவம் மற்றும் பரஸ்பரம் முக்கியத்துவம் வாய்ந்த விடயங்கள் குறித்து கலந்துரையாடப்பட்டன.

இந்த சந்திப்பில் கொழும்பில் உள்ள பிரித்தானிய தூதரகத்தின் பாதுகாப்பு ஆலோசகர் கேர்ணல் டெரன் வூட்ஸ் அவர்களும் கலந்துகொண்டார்.

(அ)

# மாணவர்களை இலக்கு வைத்து போதைப்பொருள் விற்றவர் கைது!

கொழும்பு, ஒக். 26

பாடசாலை மாணவர்கள் மற்றும் இளைஞர்களை இலக்கு வைத்து கஞ்சா கலந்த போதைப் பொருள் விற்பனை செய்த நபரொருவர் மஹியங்கனை நகரில் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

44 வயதுடைய சந்தேக நபர் மஹியங்கனை, பதியத்தலாவ வீதியை சேர்ந்தவர் என பொலிஸார் தெரிவித்தனர்.

மஹியங்கனை நகரில் சந்தேகநபர் இந்த சட்டவிரோத செயலை மேற்கொண்டு வருவதாக பொலிஸாருக்கு கிடைக்கப் பெற்ற இரகசிய தகவலுக்கு அமைய பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது வியாபார நிலையத்தில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 20 கஞ்சா கலந்த போதைப் பொருள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

(அ)

# சிலாவத்துறை மத்திய ம.வியில் நிர்மாணிக்கப்பட்ட இரண்டு மாடிக் கட்டடம் மாணவர்கள் பாவனைக்கு!






மன்னார், ஒக். 26

மன்னார் சிலாவத்துறை மத்திய மகா வித்தியாலயத்தில் நிர்மாணிக்கப்பட்ட "குவைத் ஸகாத்" நிறுவனத்தினால் புதிய இரண்டு மாடிக் கட்டிடத்தின் திறப்பு விழா கடந்த திங்கட்கிழமை நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தலைமையில் நடைபெற்றது.

கிராமிய பொருளாதார இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தானின் வேண்டுகோளுக்கு இணங்க "குவைத் ஸகாத் ஹவுஸ்" நிதியுதவியுடன் இக்கட்டடம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. அதற்காக செலவிடப்பட்ட தொகை 200 இலட்சம் ரூபா. இப் பாடசாலையில் சுமார் 350 மாணவர்கள் கல்வி கற்கின்றனர்.

இரண்டு தளங்களைக் கொண்ட, கீழ் தளத்தில் 3 வகுப்பறைகளும், மேல் தளத்தில் பிரதான மண்டபமும் உள்ளன.

இதன்போது, கிராமிய பொருளாதார இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான், இலங்கைக்கான குவைத் பிரதித் தூதுவர் பத்ர் அல்னோ வைம், குவைத் ஸகாத் ஹவுஸின் பணிப்பாளர் நாயகம் மஜீத் எஸ்.எம். எஸ். அலசெமி மற்றும் அதிகாரிகள் குழுவினர் கலந்து கொண்டனர்.

(அ)

# யாழ். போதனா வைத்தியசாலைக்குள் மதுபோதையில் நுழைந்த இருவர் கைது!

யாழ்ப்பாணம், ஒக். 26

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்குள் மதுபோதையில் நுழைந்து பாதுகாப்பு உத்தியோகத்தர்களுடன் முரண்பட்டு உள்ளே செல்ல முயன்ற இருவர் யாழ்ப்பாணம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

நேற்று முன் தினம் மாலை குறித்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

நோயாளி ஒருவரை பார்வையிடுவதற்காக வைத்தியசாலை வளாகத்திற்குள் மதுபோதையில் அத்துமீறி நுழைந்த இருவர் பாதுகாப்பு உத்தியோகத்தர்களுடன் முரண்பட்டனர்.

விடயம் தொடர்பில் வைத்தியசாலைப் பணிப்பாளரின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்ட நிலையில் யாழ்ப்பாணம் பொலிஸாருக்கு தகவலளிக்கப்பட்டு இருவரும் கைது செய்யப்பட்டனர்.

சந்தேக நபர்கள் இருவரையும் யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றத்தில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

(அ)

# வேகமாக பரவும் டெங்கு!

## பொதுமக்களுக்கு எச்சரிக்கை

கொழும்பு, ஒக். 26

நாட்டில் நிலவும் சீரற்ற கால நிலை காரணமாக டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக சுகாதார அதிகாரிகள் எச்சரித்துள்ளனர்.

இவ் ஆண்டு இதுவரையான காலப்பகுதியில் டெங்கு நோயினால் 39 மரணங்களும், 66,500 நோயாளர்களும் பதிவாகியுள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவின் பணிப்பாளர் டொக்டர் நளின் ஆரியரத்ன தெரிவித்தார்.

கண்டி, கொழும்பு, நுகேகொடை, கொத்தட்டுவ, கம்பஹா மற்றும் அத்தனகல்ல பிரதேசங்களில் அதிகளவு டெங்கு நோயாளர்கள் கண்டறியப்பட்டுள்ளதாக அவர் மேலும் கூறினார்.

(அ)

## போதை...

போதைப்பொருள் கடத்தலுக்கு எதிரான சிங்கப்பூர் சட்டங்கள் இங்கும் அமுல் படுத்தப்பட வேண்டும்.

இதில் பிரதான பெரும் வியாபாரிகளாக உள்ளவர்கள் பொதுமக்கள் பணத்தில் சிறைகளில் பராமரிக்கப்பட்டு வருகின்றனர்.

இது ஈஸி கேஷ் முறையில் இயங்கினாலும்,தற்போதைய அரசாங்கத்திடம் இதற்கு தீர்வு இல்லை. ஐக்கிய மக்கள் சக்தியின் அரசாங் கத்தின் கீழ் சிங்கப்பூரின் தண்டனை முறை வழங்கப்படும்.

போதைப்பொருள் கடத்தல்காரர்களை காப்பாற்ற தற்போது பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. போதைப்பொருள் பயங்கரவாதம் என்பதால், இதனை கட்டுப்படுத்த விசேட படைப் பிரிவு அவசியம் - என்றார்.

## மீண்டும்...

மட்டக்களப்பு மாநகரசபைக்குட்பட்ட இருதயபுரம் பகுதிக்கு நேற்று மாலை சென்ற அம்பிட்டிய சுமனரத்ன தேரர்,

தமிழர்கள் மற்றும் தமிழ் அரசியல்வாதிகள் உள்ளிட்டோரை எச்சரிக்கும் வகையில் கடும் தொனியில் கத்தி கூச்சலிட்டதன் காரணமாக அப்பகுதியில் பதற்ற நிலை ஏற்பட்டுள்ளது.

இருதயபுரம் கிழக்கு பகுதியில் உள்ள சிங்கள மயானத்தில் வீடு உடைத்த கழிவுப்பொருட்கள் போடப்பட்டுள்ள நிலையில் அங்குவந்த அம்பிட்டிய சுமணரத்ன தேரர் அதற்கு எதிராக கடுமையான வார்த்தைப்பிரயோகங்களை கொண்டு பேசினார்.

இதன்போது அப்பகுதிக்கு வந்த பொலிஸார் அவரை சமாதானப்படுத்தி அங்கிருந்து செல்வதற்கான ஏற்பாடுகளை செய்தனர்.

குறித்த பகுதியில் இரண்டு தினங்களுக்கு முன்பாக குறித்த கட்டட இடிபாடுகள் கொட்டப்பட்ட நிலையில் அவற்றை அங்கிருந்து அகற்றுவதற்கான நடவடிக்கையை எடுப்பதாக மாநகர சபை ஆணையாளர் சுமனரத்ன தேரரிடம் நேற்றுமுன்தினம் தெரிவித்திருந்தாகவும் எனினும் அவர் நேற்று அங்கு சென்று இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபட்டதாகவும் மாநகர ஆணையாளர் தெரிவித்தார்.

குறித்த கட்டட இடிபாடுகளை அகற்றி அப்பகுதியை தூய்மைப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதகாவும் அவர் தெரிவித்தார்.

எனினும் இரண்டு முச்சக்கர வண்டிகளில் வந்த அம்பிட்டிய சுமணரத்ன தேரரும் அவருடைய சகாக்களும் அங்கிருந்தவர்களுக்கு அச்சுறுத்தல் விடுக்கும் வகையில் கருத்துகளை தெரிவித்ததுடன் இன முரண்பாடுகளை ஏற்படுத்தும் வகையிலும் கருத்துக்களை கூறனர்.

இங்கு அம்பிட்டிய சுமணரத்ன தேரர் கத்தி கூச்சலிடுகையில்,

"பொலிஸார் இந்த வீதியை மூடினார்கள், பிரச்னை ஏற்படுத்தினார்கள். இறுதியில் எமக்கு எதிராகவே வழக்குத் தாக்கல் செய்தனர். இவர்களின் இந்த செயற்பாடு சரியானதா.

இவ்வாறு செய்ய வேண்டாம். நாம் உதவியற்றவர்கள். இனம் என்ற ரீதியில், இங்கு இடம்பெறும் குற்றங்களைத் தடுக்க வேண்டும்.

நாட்டில் இனவாதம் இல்லை, மதவாதமும் இல்லை. இந்த நாட்டில் உள்ள மக்கள் அனைவரும் நல்லிணக்கத்துடன் மிகவும் அமைதியாக வாழ்கின்றனர்.

சாணக்கியன் மற்றும் இங்குள்ள அதிகாரிகள் மேற்கொள்ளும் கீழ்த்தரமான நடவடிக்கைகளால் மீண்டும் ஒரு யுத்தம் ஏற்படும். அவ்வாறு யுத்தம் ஏற்படுவதை தடுக்க முடியாது" என்றும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அவரது இந்தச் செயற்பாட்டினால் நேற்று மாலை அந்தப் பகுதியில் பெரும் பரபரப்பு - பதற்றம் ஏற்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(அ)

## சர்ச்சைக்குரிய...

கப்பல் , கடந்த மாதம் 19 ஆம் திகதி இந்து சமுத்திரத்திற்குள் பிரவேசித்தது.

இந்து சமுத்திரத்தில் இந்தியாவின் பிரத்தியேக பொருளாதார மண்டலமான நைன்ரி ஈஸ்ட் ரிட்ஜ் என அடையாளப்படுத்தப்படும் கடலின் முகடு வழியாகவும், பின்னர் இந்து சமுத்திரத்தின் பல பகுதிகளுக்கும் சீன ஆய்வுக் கப்பல் பயணித்தது.

இந்தியா தீவிர கவனம் செலுத்தியதால், கப்பல் பயணத்தின் ஆரம்பம் முதல் பல சர்ச்சைகள் ஏற்பட்டன.

கப்பலின் இலங்கைக்கான பயணம் ஒக்ரோபர் 25 ஆம் திகதி அதாவது நேற்று இடம்பெறும் என கடந்த ஓகஸ்ட் மாதம் சீனாவிலிருந்து கப்பல் புறப்படுவதற்கு முன்னரே கடற்படையினர் அறிவித்திருந்தனர்.

எனினும், உயர்மட்ட இராஜதந்திரிகளுக்கு இந்தியா வழங்கிய பதில் நடவடிக்கைகளால், சீன ஆராய்ச்சிக் கப்பல் கொழும்பு துறைமுகத்திற்கு வருவது தாமதமானது.

இதேவேளை, சீன கப்பல் இலங்கைக்குள் பிரவேசிப்பதற்கு அனுமதி வழங்கப்படவில்லை என வெளிவிவகார அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி கடந்த மாதம் 25 ஆம் திகதி நியூயோர்க்கில் குறிப்பிட்டிருந்தமை நினைவுகூரத்தக்கது.

எவ்வாறாயினும், திட்டமிட்ட தினத்திலேயே ஷி யான் 6 எனும் இந்த சீனாவின் ஆய்வுக் கப்பல் நேற்று கொழும்பு துறைமுகத்திற்கு வருகை தந்துள்ளது.

பொருட்கள் மற்றும் ஏனைய வசதிகளை பெற்றுக்கொள்வதற்காக சீன கப்பல் கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்துள்ளதாக வெளிவிவகார அமைச்சின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் இன்று தெரிவித்தார்.

இதேவேளை, ஷி யான் 6 கப்பலுக்குள் பிரவேசிப்பதற்கு, தமது நான்கு பிரதிநிதிகளுக்கு வெளிவிவகார அமைச்சு அனுமதி வழங்கியுள்ளதாக நாரா நிறுவனம் தெரிவித்துள்ளது.

எனினும், அவர்களுக்கான திகதி நேற்று பிற்பகல் 2 மணி கடந்தும் வழங்கப்படவில்லை.

ஷி யான் 6 கப்பலுடன் ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்காக ருஹுணை பல்கலைக்கழகமே ஒப்பந்தம் செய்துள்ளதாக நாரா நிறுவனம் இதற்கு முன்னர் தெரிவித்திருந்தது.

நெருக்கடி நிலையைக் கருத்தில் கொண்டு அந்த ஆய்வு நடவடிக்கைகளில் இருந்து விலகுவதாக ருஹுணு பல்கலைக்கழகம் அறிவித்தது.

28 அறிவியல் ஆய்வுத் திட்டங்களை மேற்கொள்ளும் 13 ஆய்வுக் குழுக்களுடன் இந்த கப்பல் 80 நாட்கள் கடலில் பயணிக்கும் என சீனா கூறியுள்ளது.

இதன்போது, 12,000 கடல் மைல்களுக்கும் மேற்பட்ட பகுதிகள் ஆய்வுக் குட்படுத்தப்படவுள்ளன. (அ)

## கொக்குத்...

வாரத்தில் மீண்டும் அகழ்வுப் பணிகள் தொடங்கும்." என்று வைத்தியர் கனகசபாபதி வாசுதேவ தெரிவித்துள்ளார்.

கொக்குத்தொடுவாயில் மனித புதைகுழி என சந்தேகிக்கப்படும் இடத்தில் கடந்த செப்ரெம்பர் 15ஆம் திகதிவரை அகழ்வு பணிகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

அதுவரை கிடைத்த ஆதாரங்களை ஆய்வு செய்ய ஒரு இடைவெளி தேவை என்று தடயவியல் தொல்பொருள் ஆய்வாளர் பேராசிரியர் ராஜ் சோமதேவா கூறியிருந்தார்.

கொக்குத்தொடுவாயில் மனித புதைகுழி என சந்தேகிக்கப்படும் இடத்தில் ஒன்பது நாட்கள் அகழ்வுப் பணிகள் முன்னெடுக்கப்பட்டிருந்த நிலையில், பதினேழு எலும்புக் கூடுகள் இங்கு தோண்டி எடுப்பட்டிருந்தமையும் சுட்டிக்காட்டத்தக்கது.

(அ)

## கோமாளிகளின்...

அதிலும் சிலர் ஒருவேளை உணவை கூட உண்ண முடியாத நிலையில் வாழ்ந்து வருகின்றனர்.

அந்த அளவிற்கு இலங்கையின் பொருளாதாரம் வீழ்ச்சி கண்டுள்ளது.

இந்நிலை தொடருமாயின் சோமாலியாவை விட எமது நாடு படு பாதாளத்தில் சென்றடையும்.

தற்பொழுது கடற்றொழில் அமைச்சர் தெரிவித்துள்ளார், நாட்டில் ஏற்பட்டுள்ள மீன் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்வதற்காகவும் வைத்தியசாலைகளின் தேவைகளுக்காக மீன் இனங்களை இறக்குமதி செய்வதாகவும். இப்படி இறக்குமதி செய்தால் ஏற்கனவே எமது பகுதியில் உள்ள மீனவர்கள் ஆழ்கடலில் மீன் பிடிக்க முடியாத நிலையிலும் கரையோரங்களில் மீன் பாடு இல்லாமலும் தமது வாழ்வாதாரத்தை மேற்கொள்ள முடியாத நிலையில் வாழ்ந்த வரும் நிலையில் தற்பொழுது கடல்றொழில் அமைச்சராக இருந்து கொண்டு இப்படியான விடையங்களை கூறுவது ஏற்கமுடியாது.

முன்னர் கூறினார் கடல் தொழிலாளர்களுக்கு அட்டை பண்ணை மூலம் மீனவ குடும்பங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதாகவும் கடலட்டை பண்ணையும் இல்லை, வாழ்வாதாரமும் இல்லை கடற்றொழில் அமைச்சர் ஒரு தமிழனாக இருந்து கொண்டே தமிழர்களின் பிரச்னையை தீர்க்க முடியாத அமைச்சராக உள்ளார்.

அயல்நாட்டு மீனவர்களின் ட்ரோலர் படகுகளின் பிரச்னையை தீர்க்க முடியாத அமைச்சர், ட்ரோலர் படகை இரும்பு படகு மூலம் இடிப்போம் என்று கூறியவர் தற்பொழுது சீனாவிடம் சென்று மண்டியிட்டு மீன் இறக்குமதி செய்வதாக தெரிவித்துள்ளார்.

இந்நிலை தொடருமாயின் இனிவரும் காலங்களில் இறக்குமதி செய்யப்படுகின்ற மீன் இனங்களையே நாங்கள் உண்ண வேண்டிய நிலை ஏற்படும் எனவும் மீனவர்களின் வாழ்வாதாரமும் இல்லாமல் அழிக்கப்படும்-என்றார்.

## சிஸ்டம்...

நடவடிக்கை எடுத்து வருவதாக தொழில் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக் கார தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணாயக்கார இவ்வாறு தெரிவித்தார்.

இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த அமைச்சர் மனுஷ நாணாயக்கார,

கடந்த காலங்களில் நாடு எதிர்கொண்ட பொருளாதார நெருக்கடிகளில் இருந்து மீண்டுவர நாம் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றோம். வரலாற்றில் அதிகளவிலான சட்டவிதிமுறைகளை நிறைவேற்றும் காலமாக இக்கால கட்டத்தைக் குறிப்பிடலாம்.

நாட்டில் உள்ள முறைமையை (Systems Change) மாற்ற வேண்டும் என்றே மக்கள் வீதிக்கு இறங்கி ஆர்ப் பாட்டம் செய்தனர். எனவே அந்த மாற் றத்தைக் கொண்டு வரவே காலங்கடந்த சட்டங்களுக்குப் பதிலாக இன்றைய காலத்திற்கு ஏற்ற வகையில், அதிகமான சட்ட விதிமுறைகளைக் கொண்டுவர நடவடிக்கை எடுத்து வருகின்றோம்.

அதேபோன்று, அரசாங்கம் மாறும் போது மாற்றம் அடையாத, ஆளும் கட்சிகள் மாறும்போது மாற்றமடையாத, நிலையான கொள்கைகளைத் தயாரிக்கும் பணிகளும் தற்போது இடம்பெறுகின்றன. அதன்படி, ஐந்தாண்டு வெளிநாட்டு வேலை வாய்ப்பு கொள்கை இன்று அறிமுகப் படுத்தப்பட்டது. இவ்வாறு அனைத்துத் துறைகளுக்குமான கொள்கைகள் தயரிக்கப்பட்டு வருகின்றன - என்று தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார். (அ)

## சட்டவிரோத..

புத்தளத்தில் உள்ளோர் இழுவைப் படகை புத்தளம் கடல் தொழில் திணைக்களம் நிற்பாட்டி இருக்கும் போது வடக்கில் ஏன் நிறுத்தவில்லை?

இவரது பிரச்னை வடக்கு கடல் தொழிலாளர்களை அளிக்க வேண்டும். சீனா போன்ற நாடுகள் இவருடைய கஜானாவை நிரப்புகின்றது . சீனாவின் விருப்பத்துக்கு தான் அவர் செய்கிறார்.

புத்தளத்தில் இரண்டே இரண்டு கடலட்டைப் பண்ணைதான் உண்டு.

இவர் தமிழராயிருந்து ஒவ்வொரு சங்கங்களையும் இரண்டாக்கி மீனவரை ஒன்று படாமல் வைத்துக்கொண்டு இந்த சட்டவிரோத செயல்பாட்டை செய்கிறார்.

வடக்கை அபிவிருத்தி செய்யும் நோக்கில் இந்த கடல் அட்டை பண்ணை கொண்டுவரப்படவில்லை. இது வடக்கை அளிப்பதற்கான செயல்பாடு.

ஒட்டு மொத்த வடக்கு கடல் தொழிலாளருடைய பிரச்னை தனி ஒரு கட்சிக்கும் தனி ஒரு அமைச்சுக்கும் இருக்கிற பிரச்னை அல்ல. அது எங்களுடைய எதிர்காலச் சந்ததியினருடைய பிரச்னை.

இதை நாங்கள் இந்த சட்டவிரோத கடல் தொழிலை அனுமதித்து கொண்டு போக விடமாட்டோம். கடலட்டை பண் ணையை மட்டுப்படுத்துகின்ற பிரச்னையை நாங்கள் எதிர்காலத்தில் கையிலெடுப்போம்.

இன்று இந்திய மீனவர் பிரச்னைக்கு ஐ.நாவில் போய் முறையிடுகிறார். நாங்களும் இந்த உள்ளூர் கடலட்டை பண்ணைக்கு ஐ.நா வதிவிடப்பிரதி நிதியிடம் முறையிட வேண்டும்.-என்றார். (அ)

## கிளிநொச்சியில்...

பாராளுமன்ற உறுப்பினர்களான சிவஞானம் சிறீதரன் ,அங்கஜன் இராமநாதன் மற்றும் வனவள திணைக்கள மாவட்ட உத்தியோகத்தர்கள், கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள நான்கு பிரதேச செயலாளர்கள் என பலர் கலந்து கொண்டு காணிகளை விடு விக்கும் முயற்சிகளின் சமகால நிலையை ஆராய்ந்தனர். அதிகாரிகள் தரப்பிலிருந்து காணி, வனபரிபாலன திணைக்கள உத்தியோ கத்தர்கள் மற்றும் பிரதேச செயலாளர் கள், மாவட்ட செயலக பதவி நிலை உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

இதில் வனபரிபாலன உத்தியோகத்தர்களின் இறுக்கமான நடைமுறையால் அதிகாரிகள் மீதும் கூடவே அரசின் காணிகளை விடுவிக்கும் அதன் திட்ட வழிமுறை மீதும் சந்தேகங்கள் வெளிப்படுத்துவதாக இச் சந்திப்பு இருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

## புதிய...

நடைமுறைப்படுத்துவதாகவும் மேலதிக நிபுணத்துவத் தெரிவுகளைப் பெற்றுக் கொள்வதற்கான இயலுமை தொடர்பில் தேடியறிவதற்கு எதிர்பார்த் திருப்பதாகவும் ஜனாதிபதி சுட்டிக் காட்டினார்.

கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று புதன்கிழமை நடைபெற்ற 117 ஆவது இலங்கை பொறியிலாளர்கள் நிறுவனத்தின் வருடாந்த அமர்விலேயே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நிகழ்வில் மேலும் கருத்து தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, தொழில்நுட்ப புத்தாக்க முயற்சிகள் மற்றும் விவசாய நவீனமயப்படுத்தல் வேலைத்திட்டத்துடன் இலங்கையை புதிய பொருளாதார முறைமையை நோக்கி இட்டுச் செல்வதற்கு ஒன்றுபடு மாறும் பொறியியல் நிறுவனங்களிடம் ஜனாதிபதி வேண்டுகோள் விடுத்தார்.

போட்டித்தன்மை, டிஜிட்டல் மாற்றம் மற்றும் பசுமை பொருளாதாரம் ஆகிய துறைகளில் பொறியியலாளர்கள் சிறப்பான பணியை ஆற்றி வருவதாகவும், அந்த துறைகளைப் பலப்படுத்தினால் நாட்டில் துரித பொருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்த முடியுமெனவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார். (அ)

ஈழநாடு
Eelanadu

# கடன்கள் வழங்கிய அனைவரையும் இலங்கை சமமாக நடத்தவேண்டும்!

## மத்திய வங்கி ஆளுநரிடம் அமெரிக்கத் தூதுவர்

கொழும்பு, ஒக். 26

**இலங்கை கடன் வழங்கிய அனைவரையும் சமமாக நடத்தவேண்டும் என இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் மத்திய வங்கி ஆளுநர் நந்தலால் வீரசிங்கவிடம் வலியுறுத்தியுள்ளார்.**

**மத்திய வங்கி ஆளுநரை சந்தித்து உரையாடியவேளை அவர் இதனை தெரிவித்துள்ளார்**



இது குறித்து அமெரிக்க துதுவர் தனது சமூக ஊட கப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

"இன்று நான் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரை சந்தித்து சர்வதேச நாணய நிதியத்துடன் பணியாளர் மட்ட உடன்படிக்கை சர்வதேச நாணயநிதியத்தின் இரண்டாவது தொகுதி கடனை பெறுவதில் முன்னேற்றம் ஆகியவற்றிற்காக வாழ்த்துக்களை தெரிவித்தேன்" என அமெரிக்க தூதுவர் அதில் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் கடன் மறுசீரமைப்பு நடவடிக்கைகள் நியாயபூர்வமானதாகயிருக்க வேண்டிய தன் அவசியத்தை வலியுறுத்தினேன் - கடன் வழங்கிய அனை வரையும் சமமான விதத்தில் நடத்துவது அவசியம் என் பதை வலியுறுத்தினேன் எனவும் ஜூலி சங் தனது பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

இந்த விடயத்தில் தொடர்புபட்டுள்ள அனைத்து தரப்பினரும் வெளிப்படைத் தன்மையுடன் நடந்து கொள்வது அவசியம் எனவும் குறிப்பிட்டுள்ள அவர், இலங்கையில் ஸ்திரத்தன்மை மற்றும் வளர்ச்சியை உறுதி செய்து நியாயம் வெளிப்படைத் தன்மை ஒரு மைப்பாடு மற்றும் உள்ளடக்கிய தன்மை ஆகியவற்றை மதிக்கும் ஒரு பொருளாதாரச் சூழல் குறித்து அமெரிக்கா உறுதியுடன் உள்ளது எனவும் தெரிவித்துள்ளார். (அ)

# அத்தியாவசிய பொருள்களின் விலைகளை குறைத்த சதொச

கொழும்பு, ஒக். 26

லங்கா சதொச நிறுவனம் மேலும் நான்கு அத்தியாவசியப் பொருட்களின் விலைகளைக் குறைத்துள்ளது.

அதற்கிணங்க சம்பா அரிசி, கொண்டைக்கடலை, உளுத்தம் பருப்பு மற்றும் சிவப்பு அரிசி ஆகியவற்றின் விலைகள் குறைக்கப்பட்டுள்ளதாக அந்த நிறுவனம் அறிவித்துள்ளது.

ஒரு கிலோ சம்பா அரிசியின் விலை 6 ரூபாயினாலும், ஒரு கிலோ கொண்டைக்கடலையின் விலை 6 ரூபாவினாலும், பருப்பு கிலோ ஒன்றின் விலை 5 ரூபாவினாலும், சிவப்புஅரிசி கிலோ 3 ரூபாவினாலும் குறைக்கப்பட்டுள்ளது.

அதன்படி சம்பா அரிசி கிலோ 222 ரூபாவாக குறைவடைந்துள்ளது.

ஒரு கிலோ கொண்டைக்கடலையின் விலை 549 ரூபாய் என்றும் ஒரு கிலோ பருப்பின் விலை 295 ரூபாய் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

சிவப்பு அரிசி கிலோவின் புதிய விலை 169 ரூபாய் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# மரண அறிவித்தல்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 24 - 07 - 1936 | 20 - 10 - 2023 |

## திருமதி பிலோமினா ஜோன் (அனி)

ஊர்காவற்றுறை, நாரந்தனையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்டு தற்போது ஜெர்மனி ஒபெகௌசன் நகரில் வாழ்ந்தவரான திருமதி பிலோமினா ஜோன்(அனி) கடந்த 20.10.2023 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு. திருமதி வஸ்ரியாம்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ் சென்றவர்களான திரு.திருமதி டேவிட் கலறாஜா தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற ஜோன் அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான பீற்றர், போல், சிறில், அரியற், மற்றும் றோசா, அம்புறோஸ் ஆகியோரின் அன்புச் சகோதரியும் விக்ரர், நேசமலர், ராணி, மிலனா, லுசிலா, றதினி மற்றும் காலஞ்சென்றவர்களான டேவிசன், தேவரெத்தினம், ஆகியோரின் அன்புத்தாயாரும் சுகுணா, காலஞ்சென்ற கிங்ஸ்லி, மற்றும் டோமினிக், சோதி, டரல், சற்குணம் ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்றவர்களான றஞ்சிதமலர் , கிருபமலர் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஜெறுண், ஜேறீஸ், சுயாழினி, ராஷ் காலஞ்சென்ற கிறிஸ்ரா மற்றும் ஜெனி, ஜெஸ்றி, அனோஸ், டாவிற், ஜோன்சன்,ஜெறீ,சறோன்,றொசான்,ஏஞ்சல் ஆகியோரின் அன்புப் பாட்டியும் கிறிஸ்ரியான், அலெக்ஸ், அறியானா, மின்ற், சோபியா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதி அஞ்சலித் திருப்பலியும் நல்லடக்கமும் எதிர்வரும் 30.10.2023 திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு நடைபெறும். இறுதி அஞ்சலித் திருப்பலியை தொடர்ந்து பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு :
**ஹறியற் கிங்ஸ்லி (மகள்)**
**004 9176 3014 1224**
**ராஷ் (பேரன்)**
**004 9176 8333 3349 - ஜெர்மனி**

முகவரி : Friedhofskapelle Westfriedhof
Oberhausen-Lirich
Emscherstrasse.92
46049 Oberhausen, Germany.

# பொன்னம்பலத்தின் பேரனும் ஈ.பி.டி.பியின் நிலைப்பாட்டில்!

## அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 26

மத்தியில் கூட்டாட்சி மாநிலத்தில் சுயாட்சி என்ற ஈழமக்கள் ஜனநாயக கட்சியின் நிலைப்பாட்டை பொன்னம்பலத்தின் பேரனும் ஆதரிக்கிறார் என ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் செயலாளர் நாயகமும் கடற்தொழில் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

நேற்று யாழ்ப்பாணத்தில் உள்ள அவரது கட்சி தலைமையகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஈழ மக்கள் ஜனநாயக கட்சி தமிழ் மக்களின் யதார்த்தமான நடைமுறை சாத்தியமான விடயங்களையே முன்னகர்த்தி வருகிறது.

மத்தியில் கூட்டாட்சி மாநிலத்தில் சுயாட்சி என்பது இன்று நேற்று நாம் வலியுறுத்திய விடயம் அல்ல. ஜி.ஜி. பொன்னம்பலத்தின் பேரனும் அதை நிலைப்பாட்டை வலியுறுத்துவது வரவேற்கத்தக்க விடயம்.

அண்மையில் யாழ்ப்பாணத்தில் இரண்டு போராட்டங்களுக்கான அழைப்பை தமிழ்க் கட்சிகள் சில வெளியிட்டன.

இரண்டு போராட்டங்களும் பிசுபிசுத்துபோன நிலையில் இது எமது மக்களின் எதிர்காலத்தை பின்னோக்கி நகர்த்துவதாக அமைந்துவிட்டது.

போராட்டங்கள் மனித குலத்திற்கு அவசியமான நிலையில் நன்மைகளை வரவேற்று தீமைகளை எதிர்க்க போராட்டங்கள், ஆர்ப்பாட்டங்கள் தேவை .

அதற்கு தமிழ் பேசும் சமூகம் விதிவிலக்கல்ல .தமிழ் மக்கள் சார்ந்து இரண்டு விடயத்தைச் சொல்லலாம் . கடைசியாக நடந்த கதவடைப்பு, மனித சங்கிலியை கூறலாம் .

இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் அடிப்படையில் ஈ.பி.டி.பி தேசிய நீரோட்டத்தில் இணைந்தது. அதன் அடிப்படையில் போராட்டம் தேவையற்றது என்று இல்லை. தேவையேற்பட்டால் போராட்டம் செய்யத்தான் வேண்டும் .

கதவடையிப்புக்கு எதிராக எமது உறுப்பினர்கள் முகநூலில் எதிர்ப்பை வெளியிட்டுள்ளார்கள். ஆனால் நான் எனது முகநூலில் எழுதியிருந்தால் அது 100, 200 வீதம் உண்மையானது. ஆகவே என்னுடைய முகநூலில் வரும் கருத்துகளே அதிகாரபூர்வமானவை.

ஆகவே மத்தியில் கூட்டாட்சி மாநிலத்தில் சுயாட்சி என கூறும் தமிழ்க் கட்சி உண்மையான நிலைப்பாட்டைக் கூறினாலும் அக் கட்சியிடம் கொள்கை இல்லை - என்றார். (அ)

# ஹரக் கட்டாவை விடுவிக்க பயங்கரவாதத் தாக்குதலா?

## குற்றப்புலனாய்வு திணைக்களம் அறிக்கை

கொழும்பு, ஒக். 26

குற்றப் புலனாய்வு திணைக்களத்தின் பொறுப்பில் தடுத்து வைக்கப்பட்டுள்ள ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக் குழுவின் குற்றவாளியான ஹரக் கட்டா உள்ளிட்ட சில சந்தேக நபர்களை விடுவிப்பதற்காக தொடர்ச்சியான முற்றுகை பாணியிலான பயங்கரவாதத் தாக்குதல்களை நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளதாக குற்றப் புலனாய்வு திணைக்களம் கோட்டை நீதவான் திலின கமகேயிடம் அறியப்படுத்தியுள்ளது.

நீதிமன்றத்தில் நகர்த்தல் பத்திரம் ஒன்று தாக்கல் செய்யப்பட்டு இந்த விடயம் அறிவிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் கைது செய்யப்பட்ட சந்தேகநபர் ஒருவரினால் இந்த விடயங்கள் கண்டறியப்பட்டதாக குற்றப் புலனாய்வுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதன்படி, இது தொடர்பில் மேலதிக விசாரணைகள் நடத்தப்படும் என நீதவானிடம் குற்றப் புலனாய்வு திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

இந்தநிலையில், சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்து, மேலதிக அறிக்கையை சமர்ப்பிக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

அத்துடன், குறித்த திட்டத்துக்கு உதவி புரிந்ததாக கூறப்படும் முன்னாள் கொமாண்டோ படையைச் சேர்ந்த அதிகாரிகள் கைது செய்யப்பட்டு விசாரிக்கப்பட்டு வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. (அ)

# அமைச்சுக்கள் பலவற்றின் செயற்பாடுகளில் திருத்தம்

கொழும்பு, ஒக். 26

அமைச்சுக்கள் பலவற்றின் கடமைகள் மற்றும் செயற்பாடுகளில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் இதற்கான வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

அத்துடன் வர்த்தமானி மூலம், அரச பெருந்தோட்ட முயற்சிகள் மறுசீரமைப்புக்கான அமைச்சரவை அல்லாத அமைச்சை நிறுவுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அமைச்சரவை அமைச்சுக்கள் சிலவற்றில் மாற்றம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

குறித்த மாற்றங்களைத் தொடர்ந்து அமைச்சுக்களின் கடமைகள் மற்றும் செயற்பாடுகளில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 26.10.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# தெல்லிப்பழை மகாஜனாவுக்கு வெள்ளிப் பதக்கம்




அகில இலங்கை பாடசாலைகளுக்கிடையிலான தேசியமட்ட மெய்வல்லுநர் போட்டி கொழும்பு சுகத தாஸ விளையாட்டரங்கில் நடைபெற்றுவருகின்றது.

நேற்று முன் தினம் நடைபெற்ற 20 வயதுப் பெண்க ளுக்கான கோலூன்றிப் பாய்தல் போட்டியில் மகாஜனக் கல்லூரி வீராங்கனை பி.டனுசிகா 2.60 மீற்றர் தாண்டி வெள்ளிப்பதக்கத்தை வென்றுள்ளார். (அ)

# றியல் மட்ரிட் செல்லும் ஹலான்ட்?

இங்கிலாந்து பிறீமியர் லீக் உதைபந்தாட்டக் கழக மான மன்செஸ்டர் சிற்றியின் முன்களவீரரான எர்லிங் ஹலான்ட் குறித்து ஸ்பானிய லா லிகா கழக மான றியல் மட்ரிட் கவனம் செலுத்துவதாகக் கூறப்படுகிறது.

எவ்வாறாயினும் எதிர்வரும் 2027ஆம் ஆண்டு வரை யில் சிற்றியுடன் ஒப்பந்தத்தைக் கொண்டுள்ள 23 வயதான ஹலான்ட்டைக் கைச்சாத்திடுவதற்கு 180 மில்லியன் யூரோக்கள் தொடக்கம் 200 மில்லியன் யூரோக்கள் வரையான தொகையைச் செலுத்த வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது.





# தென்னாபிரிக்க அணி 149 ஓட்டங்களால் வெற்றி!

உலக கிண்ண கிரிக்கட் தொடரின் பங்களாதேஷ் அணிக்கு எதிரான போட்டியில், தென்னாப்பிரிக்க அணி 149 ஓட்டங்களால் வெற்றிபெற்றுள்ளது.

வான்கடே மைதானத்தில் இடம்பெற்ற குறித்த போட்டியின் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற தென்னாப்பிரிக்க அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

அதன்படி, நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்கள் நிறைவில், அந்த அணி 5 விக்கட்டுக்களை இழந்து 382 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

383 ஓட்டங்கள் என்ற வெற்றியிலக்கை நோக்கி பதிலளித்தாடிய பங்களாதேஸ் அணி 46.4 ஓவர்கள் நிறைவில், சகல விக்கட்டுக்களையும் இழந்து 233 ஓட்டங்களை பெற்று தோல்வியடைந்துள்ளது.

# இலங்கை குழாமில் மத்தியூஸ்

உலகக் கிண்ணத்திற்கான இலங்கை கிரிக்கெட் குழாத்தில் அஞ்சலோ மத்தியூஸ் இணைத்துக்கொள் ளப்பட்டுள்ளார். ஐ.சி.சி. போட்டி தொழில்நுட்பக் குழுவின் அனுமதியுடனேயே அவர் இலங்கை குழாத் தில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளார்.

இலங்கை குழாத்தில் இடம்பெற்ற இளம் வேகப் பந்துவீச்சாளர் மதீஷ பத்திரணவுக்குப் பதிலாகவே முன்னாள் இலங்கை அணித் தலைவரும் சகலதுறை வீரருமான அஞ்சலோ மத்தியூஸை குழாத்தில் இணைப் பதற்கு ஐசிசி போட்டி தொழில்நுட்பக் குழு அனுமதி வழங்கியுள்ளது.

இதற்கு அமைய இங்கிலாந்து அணிக்கு எதிராக பெங்களூரு எம். சின்னஸ்வாமி விளையாட்டரங்கில் இன்று வியாழக்கிழமை நடைபெறவுள்ள போட்டியில் மெத்யூஸ் விளையாடுவார் என நம்பப்படுகிறது.

221 சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் போட்டிகளில் விளையாடியுள்ள அஞ்சலோ மத்தியூஸ் மிகுந்து அனுப வசாலி ஆவார். இலங்கை குழாத்தில் இணைக்கப் பட்டுள்ளதால் கடந்த நான்கு உலகக் கிண்ண அத்தியா யங்களில் விளையாடிய வீரர் என்ற பெருமையைப் பெறுகிறார். இதற்கு முன்னர் 2011, 2015, 2019 ஆகிய உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டிகளில் மத்தியூஸ் விளையாடியிருந்தார்.

உபாதைகளினால் பெரும் நெருக்கடியை எதிர் கொண்டுவரும் இலங்கை அணிக்கு மத்தியூஸின் மீள்வருகை தெம்பூட்டும் என நம்பப்படுகிறது.

இலங்கை அணியின் வேகப்பந்துவீச்சாளர் மதீஷ பத்திரணவின் வலது தோள் பகுதியில் தசை பிரள்வு ஏற்பட்டுள்ளதால் அவர் தொடர்ந்து உலகக் கிண்ணப் போட்டிகளில் விளையாடமாட்டார் என அறிவிக்கப் பட்டிருந்தது. மதீஷ பத்திரணவுக்கு முன்னர் வழமை யான அணித் தலைவர் தசுன் ஷானக்க உபாதைக்குள் ளாகி குழாத்திலிருந்து நீக்கப்பட்டிருந்தார்.

இது இவ்வாறிருக்க, இலங்கை அணியின் பிரதான சுழல்பந்துவீச்சாளர் மஹீஷ் தீக்ஷனவும் உபாதைக்குள் ளாகி ஸ்கான் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டி ருந்தார்.

எனினும் அவர் உடற்தகுதியுடன் இருப்பதாகவும் இங்கிலாந்துக்கு எதிரான போட்டியில் விளையாடுவார் எனவும் இலங்கை அணி முகாமைத்துவம் தெரிவித் தது.





# சிற்றியில் நீடிக்கும் ஜூலியன் அல்வரேஸ்?

இங்கிலாந்து பிறீமியர் லீக் உதைபந்தாட்டக் கழக மான மன்செஸ்டர் சிற்றியின் முன்களவீரரான ஜூலியன் அல்வரேஸில் ஸ்பானிய லா லிகா கழகங் களான பார்சிலோனா, றியல் மட்ரிட் ஆர்வம் காட்டுகின்றபோதும் கழகத்திலேயே அவர் தொடர் வார் என அக்கழகம் நம்பிக்கையுடனுள்ளதாகக் கூறப்படுகிறது.

எதிர்வரும் 2027ஆம் ஆண்டு வரையில் சிற்றியுடன் ஒப்பந்தத்தைக் கொண்டுள்ள 23 வயதான அல்வரேஸ், இப்போது சிற்றியின் போட்டிகளில் அடிக்கடி ஆடுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# ஈட்டி எறிதலில் இலங்கைக்கு வெள்ளிப்பதக்கம்

2023 ஆசிய பரா விளையாட்டுப் போட்டிகளில் இலங்கை வீரர் சமித்த துலான் வெள்ளிப் பதக்கம் வென்றுள்ளார்.

ஆடவர்களுக்கான ஈட்டி எறிதல் போட்டியில் எவ் 64 பிரிவில் அவர் இந்த பதக்கத்தை பெற்றுள்ளார்.

குறித்த போட்டியில் சமித்த துலான் 64.09 மீற்றர் தூரம் ஈட்டி எறிந்து, வெள்ளிப்பதக்கத்தை தனதாக்கி யுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)



# கட்டாரின் இராஜதந்திரம் வெற்றியளிக்குமா? இஸ்ரேல் பணயக் கைதிகள் விடுதலையாவரா?

## பாலஸ்தீன போரில் பணயக் கைதிகள்:

ஐங்கரன் விக்கினேஸ்வரா

கட்டார் அரசின் இராஜதந்திரத்தாலும், மத்தியஸ்தத்தாலும் மேலும் இஸ்ரேலிய பணயக்கைதிகளை விடுவித்து, முழுமையான போரைத் தடுக்க முடியுமா என்பதனை இனிவரும் நாட்களிலே தான் பார்க்க முடியும்.

ஹமாஸால் பணயக் கைதிகளாக இருந்த அமெரிக்கத் தாய் மற்றும் மகளின் திடீர் விடுதலைக்கு கட்டார் அரசு முக்கிய பங்கு வகித்தது. இப்போது ஹமாஸ் வசமுள்ள சிறைபிடிக்கப்பட்டவர்களை விடுவிப்பது, முழு அளவிலான போரைத் தடுக்கும் நோக்கில், கட்டார் அரசு பரந்த உரையாடல் அல்லது மத்தியஸ்தத்திற்கு வழிவகுக்கும் என்ற நம்பிக்கை உள்ளது.

இரண்டு பணயக்கைதிகளை நிபந்தனையின்றி விடுவிப்பது நம்பிக்கையை வளர்க்கும் நடவடிக்கையாக இருக்கும் என்று பேச்சுவார்த்தையாளர்கள் ஹமாஸை சமாதானப்படுத்த முடிந்தது.



ஹமாஸ் உடனான வெற்றிகரமான பணயக்கைதிகள் பேச்சுவார்த்தை கட்டாரை இந்த நெருக்கடியில் இராஜதந்திரத்தின் மையமாக காட்ட அனுமதித்தது என்று பிரிட்டிஷ் சிந்தனைக் குழுவான லண்டன் குளோபல் ஸ்ட்ரேடஜி இன்ஸ்டிட்யூட்டின் கூறியுள்ளது.

எண்ணெய் வளம் கொண்ட பாரசீக வளைகுடாவில் உள்ள கட்டார் அரசின் தொடர் இராஜதந்திர முயற்சிகளில் இது சமீபத்திய வெற்றியாகும். கட்டார் அரசால் சமீபத்தில் அமெரிக்காவிற்கும் ஈரானுக்கும் இடையில் கைதிகள் பரிமாற்றம் நிகழ்ந்தது. மற்றும் ரஷ்யாவிலிருந்து நான்கு உக்ரேனிய குழந்தைகளை விடுவிப்பதற்கு பேச்சுவார்த்தைக்கு உதவியது.

2021 இல் ஆப்கானிஸ்தானில் இருந்து அமெரிக்கா வெளியேறுவதற்கு முன்பு தலிபான்களுடன் சமாதானப் பேச்சுக்களையும் நடத்தியது. ஆனால் ஹமாஸின் அரசியல் தலைவர்களுக்கு அடைக்கலம் கொடுத்த கட்டாரின் செயலால், இஸ்ரேலுக்கு தன்னை ஒரு மத்தியஸ்தராக முன்வைக்கும் முயற்சியை சிக்கலாக்கி உள்ளது.

### ஹமாஸ் பிடித்த பணயக் கைதிகள்:

இஸ்ரேல் - பாலஸ்தீன மோதல் நீடித்து வரும் நிலையில், ஹமாஸ் குழு, பணயக் கைதிகள் அனைவரையும் நிபந்தனையுடன் விடுவிக்க முன்வந்தது. காஸா மீதான வான்வழித் தாக்குதலை இஸ்ரேல் நிறுத்தினால், அனைத்து பொதுமக்களையும் பணயக்கைதிகளை உடனடியாக விடுவிக்க தயாராக இருப்பதாக ஹமாஸின் மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளதாக என்பிசி நிறுவனம் செய்தி வெளியிட்டது.



இஸ்ரேலியப் படைகள் காஸா பகுதியில் இராணுவத் தாக்குதலை நிறுத்தினால், ஒரு மணி நேரத்திற்குள் அனைத்து பணயக்கைதிகளையும் விடுவிக்க ஹமாஸ் அதிகாரி தயாராக இருப்பதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது.

ஆனால் காஸா நகர மருத்துவமனை மீது இஸ்ரேலின் வான்வழி தாக்குதல் நடத்தப்பட்டதில் சுமார் 500 பேர் கொல்லப்பட்டதாக தகவல்கள் தெரிவித்தன. எனினும்



மருத்துவமனை மீதான தாக்குதலுக்கு இஸ்ரேலின் இராணுவம் பொறுப்பேற்க மறுத்துவிட்டது. இதன் பின் பாலஸ்தீன மக்கள் வசிக்கும் பகுதிகளில் முன்னறிவிப்பின்றி நடத்தப்படும் ஒவ்வொரு தாக்குதலின் போதும் ஒரு இஸ்ரேலிய பணயக்கைதி கொல்லப்படுவார் என

**1976இல் ஒபரேஷன் என்டபே பணயக் கைதிகள் விடுவிப்பு நடவடிக்கையில் தளபதியான யோனாதன் நேத்தன்யாஹூம் கொல்லப்பட்டார். இவர் வேறுயாரும் அல்ல, இன்றைய இஸ்ரேலின் பிரதம மந்திரியான பெஞ்சமின் நேத்தன்யாஹூவின் அண்ணன் ஆவார்.**



ஹமாஸ் தற்போது அறிவித்துள்ளது.

பாலஸ்தீன மக்கள் மீது தாக்குதல் நடத்தினால் ஒவ்வொரு பணயக் கைதிகளாக உயிரிழப்பார்கள் என ஹமாஸ் அமைப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது.

இந்தப் பணயக்கைதிகள், உலகின் மிக அதிக மக்கள் தொகை கொண்ட இடங்களில் ஒன்றான காசா பகுதியில் உள்ள ஹமாஸ் மறைவிடங்களில் வைக்கப்பட்டுள்ளதாக நம்பப்படுகிறது. இதேவேளை, ஹமாஸூக்கு எதிராகப் போரிடுவதற்காக இஸ்ரேல் இராணுவத்திலிருந்து வெளியேறிய சுமார் 300,000 பேர் மீண்டும் அழைக்கப்பட்டுள்ளதாக இஸ்ரேலிய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

### யோம் கிப்பூர் போருக்குப் பின் இழப்பு:

யோம் கிப்பூர் போருக்குப் பிறகு இஸ்ரேலில் நடந்த வன்முறையிலேயே, பல பணயக் கைதிகள் எல்லையைத் தாண்டி காசாவிற்குள் கொண்டு செல்லப்பட்டனர். ஹமாஸின் தரை, வான் மற்றும் கடல்வழி தாக்குதல்களில் பொதுமக்கள், ராணுவத்தினர் என குறைந்தது 1500 இஸ்ரேலியர்கள் கொல்லப்பட்டதாக அந்நாட்டு அரசு உறுதிப்படுத்தியுள்ளது. 2,000க்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர். ஏவப்பட்ட 7,000 ராக்கெட்டுகளுடன் கூடுதலாக 5,000க்கும் மேற்பட்ட ராக்கெட்டுகள் இஸ்ரேலிய எல்லைக்குள் ஏவப்பட்டதாக இஸ்ரேலிய ராணுவம் தெரிவித்துள்ளது.

இஸ்ரேலும் அமெரிக்காவும் பணயக்கைதிகளை விடுவிக்க தங்களால் இயன்ற அனைத்தையும் செய்வதாக சபதம் செய்துள்ளன. தற்போது காசா பகுதியில் ஹமாஃக்கு எதிரான தரை வழி தாக்குதலை ஆரம்பிக்கும் என்று இஸ்ரேல் அறிவித்ததை அடுத்து, ஆயிரக்கணக்கான பாலஸ்தீனியர்கள் புகலிடம் தேடி தெற்கு காசாவிற்கு தப்பிச் சென்றுள்ளனர்.

### ஜெர்மனி முயுனிச் ஒலிம்பிக்ஸ் பணய விவகாரம்:

பாலஸ்தீன விடுதலை அமைப்புகள் இஸ்ரேலின் மீது நீண்ட காலமாக தாக்குதல்களில் ஈடுபட்டு வருகின்றன. குண்டு வைப்பது, ராக்கெட்டை ஏவி தாக்குவது என அனைத்தையும் கையாண்டன. இஸ்ரேல் எதற்கும் சளைக்கவில்லை. பாலஸ்தீன தீவிரவாத தாக்குதல்களை திறம்பட எதிர்கொண்டது. உலகிலேயே சிறந்த உளவுப்படை எதுவென்றால் அது இஸ்ரேல் நாட்டின் மொசாட் என நீண்ட காலமாக விளங்கியது. பாலஸ்தீன அமைப்புகளால் வெளி நாடுகளிலும் இஸ்ரேலியர்களின் மீது தாக்குதல் நடத்தாப்பட்டது.

1972 ஆம் ஆண்டு ஜெர்மனி நாட்டில் முனிச் நகரத்



தில் நடைபெற்ற ஒலிம்பிக்ஸ் போட்டியில் கலந்துகொள்ளச் சென்ற 11 இஸ்ரேலிய விளையாட்டு வீரர்களை பாலஸ்தீனிய இயக்கதைச் சேர்ந்தவர்கள் பணயமாக பிடித்து பின்னர் கொல்லப்பட்டனர்.

இதற்குப் பதிலடியாக இஸ்ரேலிய உளவு நிறுவனம் ஒலிம்பிக் வீரர்களைக் கொன்ற 11 பாலஸ்தீன தீவிரவாதிகளை உலகம் முழுவதும் சுமார் 20 ஆண்டுகள் தேடி வேட்டையாடிக் கொன்றது.

### ஏர் பிரான்ஸ் விமான கடத்தல்:

1976 ஆம் ஆண்டு, ஜூன் மாதம் 27இல் இஸ்ரேல் தலைநகரான டெல் அவிவ்விலிருந்து பிரான்ஸ் நாட்டின் தலைநகரான பாரிஸ் நகருக்குச் சென்று கொண்டிருந்த ஏர் பிரான்ஸ் விமானம் ஏதன்ஸ் நகரில் தரை இறங்கிய போது, பாப்புலர் ஃப்ரண்ட் என்ற பாலஸ்தீனிய அமைப்பைச் சேர்ந்தவர்களும், ஜெர்மனி நாட்டைச் சேர்ந்த ஒரு தீவிரவாத அமைப்பும் சேர்ந்து விமானத்தைக் கடத்தினார்கள்.

கடத்தப்பட்ட விமானம் உகாண்டா நாட்டில் உள்ள எண்டபி விமானத் தளத்திற்கு கடத்திச் செல்லப்பட்டது. விமானத்தில் 304 பயணிகள் மற்றும் 12 சிப்பந்திகள் உட்பட 316 பயணம் செய்தனர்.

இஸ்ரேலிய அரசாங்கத்துடன் தொடர்பு கொண்ட பாலஸ்தீன தீவிரவாதிகளின் கோரிக்கையாக இஸ்ரேலில் உள்ள 40 தீவிரவாதிகளையும், கென்யா நாட்டில் உள்ள 13 தீவிரவாதிகளையும் விடுதலை செய்யவேண்டும்.

இஸ்ரேலிலிருந்து எண்டபி நகரம் சுமார் 4000 கி.மீ தாலைவில் இருந்தது. இஸ்ரேல் காரியத்தில் இறங்கியது.




### ஒபரேஷன் தண்டர்போல்ட்:

பதிலடியாக இஸ்ரேலில் ஆபரேஷன் தண்டர்போல்ட்க்கு ஏற்பாடுகள் நடந்து கொண்டிருந்தன. ஜூலை 3 ஆம் தேதி இரவு, நான்கு கனரக விமானங்கள் (ஹெர்குளிஸ் சி 130) தயாராகின. உருவில் பெரியதாக இருக்கக்கூடிய விமானங்கள். 100 இஸ்ரேலிய ராணுவ வீரர்கள் விமானங்களில் ஏறிக்கொண்டனர்.

(16ம் பக்கம் பார்க்க)

# ‘இந்திய ராணுவ வீரர் ஒருவர் கூட இருக்கக் கூடாது’ மாலத்தீவு அதிபராகும் முய்சு இவ்வாறு கூறுவது ஏன்?

அன்பரசன் எத்திராஜன்

“மாலத்தீவு மண்ணில் வெளிநாட்டு இராணுவத்தினர் இருப்பதை நாங்கள் விரும்பவில்லை. இதை மாலத்தீவு மக்களுக்கு நான் உறுதியளித்தேன். பதவியேற்கும் முதல் நாளிலிருந்தே எனது வாக்குறுதியை நிறைவேற்றப் பணி செய்வேன்.”

கடந்த மாதம் மாலத்தீவு அதிபர் தேர்தலில் வெற்றி பெற்ற டாக்டர் மொஹமட் முய்சு, நேரத்தைச் சிறிதும் வீணடிக்காமல், இந்தியாவைத் தனது படைகளை மாலத்தீவிலிருந்து வெளியேற்றும்படி கேட்டிருக்கிறார்.

அடுத்த மாதம் (நவம்பர் 2023) பதவியேற்கவுள்ள முய்சு, பிபிசிக்கு அளித்த பிரத்யேக நேர்காணலில், வெற்றி பெற்ற சில நாட்களுக்குப் பிறகு இந்தியத் தூதரை சந்தித்து, ‘இங்குள்ள ஒவ்வொரு இந்திய ராணுவ வீரரும் வெளியேற வேண்டும்” என்று மிகத் தெளிவாகக் கூறியதாகச் சொன்னார்.





மாலத்தீவு நீண்ட காலமாக இந்தியாவின் செல்வாக்கின் கீழ் உள்ளது. முய்சுவின் கோரிக்கை இரு நாடுகளுக்குக் இடையே இராஜ தந்திரப் பதற்றங்களை தூண்டக் கூடும்.

### 16 ஆயிரம் கோடி ரூபாய் உதவி

உண்மையில், முய்சு மாலத்தீவு அதிபர் தேர்தலில் வெற்றி பெற்றது இந்தியாவிற்குப் பின்னடைவாகக் கருதப்படுகிறது. குறிப்பாக, அவரது போட்டியாளரும், தற்போதைய இருப்பு அதிபருமான இப்ராஹிம் முகமது சோலி 2018-இல் பதவியேற்றதிலிருந்து மாலத்தீவை இந்தியாவுக்கு நெருக்கமாகக் கொண்டுவந்தார்.

சோலியின் இந்திய நெருக்கத்தை, முய்சுவை ஆதரிக்கும் கூட்டணி, மாலத்தீவின் இறையாண்மை மற்றும் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக சித்தரித்தது.

மாலத்தீவில் உள்கட்டமைப்பு மற்றும் மேம்பாட்டுத் திட்டங்களுக்கு கடன்கள் மற்றும் மானியங்கள் வடிவில் நூற்றுக்கணக்கான மில்லியன் டாலர்களை முதலீடு செய்த சீனாவுடன் முய்சுவின் கூட்டணி நெருக்கமான உறவுகளை ஆதரிக்கிறது.

ஆனால், இந்தியப் பெருங்கடலின் முக்கியப் பகுதியைக் கண்காணிக்க, மூலோபாய ரீதியாக அமைந்துள்ள தீவுகளில் கால் பதிக்க விரும்பும் இந்தியா, மாலத்தீவின் வளர்ச்சிக்கு உதவியாக சுமார் 16 ஆயிரம் கோடி ரூபாயை வழங்கியுள்ளது.

இந்தியப் படைகள் மாலத்தீவிலிருந்து வெளியேற வேண்டிய கட்டாயம் ஏற்பட்டால், அது இந்தியாவுக்குப் பெரும் பின்னடைவாக இருக்கும்.

### இந்தியா மீதான கோபம் எப்படி வளர்ந்தது?

ஆனால் இந்தியா மாலத்தீவுக்கு வழங்கிய ‘பரிசுகள்’ மீதான கோபம் - 2010 மற்றும் 2013-இல் இரண்டு ஹெலிகாப்டர்கள், மற்றும் 2020-இல் ஒரு சிறிய விமானம் - இந்தியாவை வெளியேற்றும் இந்தப் பிரச்சாரத்திற்கு பெரும் ஊக்கத்தை அளித்துள்ளது.

இந்த வானூர்திகள் மீட்புப் பணிகள் மற்றும் மருத்துவ உதவிகளுக்காகப் பயன்படுத்தப்பட வேண்டியவை என்று இந்தியா கூறியிருந்தது.

ஆனால், 2021-ஆம் ஆண்டில், இந்திய விமானங்களை இயக்குவதற்கும் பராமரிப்பதற்கும் சுமார் 75 இந்திய ராணுவ வீரர்கள் நாட்டில் இருப்பதாக மாலத்தீவு பாதுகாப்புப் படை கூறியது. இது அந்நாட்டில் சந்தேகத்தையும் கோபத்தையும் தூண்டியது. ஏனெனில் இந்த வானூர்திகள் மாலத்தீவில் இந்திய ராணுவ இருப்பை தக்க வைக்க ஒரு சாக்காகப் பயன்படுத்தப்படுவதாக பலர் கருதினர்.





குறிப்பாக, இந்தியாவிற்கும் சீனாவிற்கும் இடையிலான பதட்டங்கள் இமயமலை எல்லையில் அதிகரித்து வருவதால், இந்தத் துருப்புக்களின் இருப்பு மாலத்தீவை ஆபத்தில் ஆழ்த்தக் கூடும் என்று முய்சு கூறுகிறார்.

“மாலத்தீவு மிகவும் சிறிய நாடு. இந்த உலகளாவிய அதிகாரப் போராட்டத்தில் நாங்கள் சிக்கிக்கொள்ள மாட்டோம்,” என்று அவர் கூறினார்.

### சீனாவுடன் நெருக்கமாகிறதா மாலத்தீவு?

அதிபர் தேர்தலுக்கு முன் பிபிசியிடம் பேசிய, பதவி விலகும் அதிபர் சோலி, இந்திய துருப்புகளின் இருப்பு குறித்த அச்சங்கள் மிகைப்படுத்தப்பட்டவை என்று கூறினார்.

“மாலத்தீவில் ராணுவ ரீதியாகச் செயல்படும் வெளிநாட்டுப் பணியாளர்கள் யாரும் இல்லை. தற்போது நாட்டில் உள்ள இந்தியப் பணியாளர்கள் மாலத்தீவு தேசிய பாதுகாப்புப் படையின் செயல்பாட்டுக் கட்டளையின் கீழ் உள்ளனர்,” என்று அவர் கூறினார்.

ஆனால் பிரச்னை விமானங்கள் பற்றி மட்டுமானதல்ல. சமீப ஆண்டுகளில் மாலத்தீவு இந்தியாவுடன் கையெழுத்திட்ட அனைத்து ஒப்பந்தங்களையும் மறுபரிசீலனை செய்ய விரும்புவதாக முய்சு கூறுகிறார்.

“அவற்றில் என்ன இருக்கிறது என்று எங்களுக்குத் தெரியாது. நாடாளுமன்றத்தில் கூட விவாதத்தின் போது சில எம்.பி.க்கள் அதில் என்ன இருக்கிறது என்று தங்களுக்குத் தெரியாது என்று கூறினார்கள். அதை நிச்சயம் கண்டுபிடிப்போம்,” என்று அவர் கூறினார்.

முய்சுவின் வெற்றிக்குப் பிறகு, மாலேயில் உள்ள சீனத் தூதர் அவரை வாழ்த்தினார் என்று பார்வையாளர்கள் குறிப்பிட்டனர்.



சீன ஜனாதிபதி ஷி ஜின்பிங்கும் முய்சுவை வாழ்த்தினார். ‘இருதரப்பு உறவுகளின் வளர்ச்சிக்கு மிகுந்த முக்கியத்துவம் அளித்து, பாரம்பரிய நட்பை முன்னெடுத்துச் செல்லவும், நடைமுறை ஒத்துழைப்பை ஆழப்படுத்தவும் அதிபராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட முய்சுவுடன் இணைந்து பணியாற்ற தயாராக இருப்பதாகவும்,” கூறினார்.

முய்சு மாலத்தீவில் சீன உள்கட்டமைப்புத் திட்டங்களைப் பற்றி உயர்வாகப் பேசியுள்ளார். சீன முதலீடுகள் மாலே நகரத்தை மாற்றியமைத்து மக்களுக்கு நன்மைகளைக் கொண்டு வந்ததாகக் கூறினார்.

### ‘மாலத்தீவு தான் முதன்மையானது’

இருப்பினும், தாம் ‘இந்தியா சார்பு’ சோலிக்கு எதிரான ‘சீனா சார்பு’ வேட்பாளர் என்பதை மறுத்துள்ளார்.

‘நான் மாலத்தீவுக்கு ஆதரவானவன். என்னைப் பொருத்தவரை, மாலத்தீவு தான் முதன்மையானது. எங்கள் சுதந்திரம் தான் முதன்மையானது,” என்கிறார் அவர். “நான் எந்த நாட்டுக்கும் ஆதரவாகவோ எதிராகவோ இல்லை,” என்கிறார்.

இருந்த போதிலும், மாலத்தீவை சீனாவுடன் நெருக்கமாக நகர்த்துவதில் முக்கிய பங்கு வகித்த முன்னாள் ஜனாதிபதி அப்துல்லா யாமீனின் கட்சி முய்சுவின் கூட்டணியில் உள்ளது.

மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகள் காரணமாக இந்தியா மற்றும் மேற்கத்திய கடன் வழங்குநர்கள் யாமீனின் நிர்வாகத்திற்கு கடன் வழங்கத் தயாராக இல்லை. தற்போது யாமீன் ஊழல் வழக்கில் 11 ஆண்டுகள் சிறைத் தண்டனை அனுபவித்து வருகிறார். அவர், எந்த நிபந்தனையும் இல்லாமல் நிதி வழங்கிய சீனாவிடம் நெருக்கமாக இருந்தார்.

பின்னர் அவர் ஷி ஜின்பிங்கின் புதிய பட்டுப்பாதை எனப்படும் ‘பெல்ட் அண்ட் ரோடு’ திட்டத்தில் இணைந்தார். இது சீனாவை சாலை, ரயில் மற்றும் கடல் இணைப்புகள் மூலம் உலகின் பிற பகுதிகளுக்கு இணைக்கும் திட்டமாகும்.

### முய்சுவின் முன்னிருக்கும் மிகப்பெரும் சவால்

தேர்தலில் போட்டியிடத் தடை விதிக்கப்பட்டிருக்கும் யாமீனின் பினாமியாகப் பார்க்கப்பட்டார் முய்சு.

தேர்தலில் வெற்றி பெற்ற உடனேயே, முய்சு, யமீனை, உயர் பாதுகாப்புச் சிறையில் இருந்து தலைநகர் மாலேவில் வீட்டுக் காவலுக்கு மாற்றுமாறு தற்போதைய நிர்வாகத்திடம் கேட்டுக் கொண்டார்.

ஆனால் இந்தியாவிடனான யாமீனின் பதற்றமான உறவைக் கருத்தில் கொண்டால், இருநாட்டு உறவுகளைச் சமநிலைப்படுத்துவது முய்சுவின் புதிய கூட்டணிக்கு ஒரு போராட்டமாக இருக்கலாம்.

முய்சு யாமீனின் நிழலில் இருந்து வெளிவர ஆர்வமாக இருப்பதாகத் தெரிகிறது. மேலும் உள்நாட்டிலும், நாட்டின் வெளிநாட்டு விவகாரங்களிலும் ஒரு புதிய பாதையை உருவாக்கத் தயாராகிவிட்டார்.

அவரது தீர்க்கமான வெற்றியைப் பொருத்தவரை, அவர் உள்நாட்டில் அதிக எதிர்ப்பை எதிர்கொள்ளாமல் இருக்கலாம். குறைந்தபட்சம் ஆரம்ப கட்டங்களிலாவது.

மாலத்தீவை இந்தியாவின் நிழலிலிருந்து வெளியேற்ற அவர் உறுதியாக இருப்பதாகத் தெரிகிறது. ஆனால், இந்தியாவைத் தனது படைகளைத் திருப்பி அழைத்துக் கொள்ளச் சொல்வது பெரிய சவாலாக இருக்கலாம். ●

# கல்முனையில் 30 வருடங்களுக்கு மேல் கடமையாற்றி ஓய்வு பெற்ற அஞ்சல் ஊழியர்களுக்குப் பிரியாவிடை

அம்பாறை, ஒக். 26

அஞ்சல் அலுவலகத்தில் மிகநீண்ட காலமாக பணியாற்றி ஓய்வு பெற்ற இரு உத்தியோகத்தர்களின் சேவை நலன் பாராட்டும் வைபவம் நேற்று முன் தினம் கல்முனை பிரதம தபாலகத்தில் கல்முனை பிரதம அஞ்சல் அதிபர் யூ.எல்எம். பைஸர் தலைமையில் நடைபெற்றது.

கடந்த காலங்களில் மிகச்சிறப்பாக அஞ்சல் சேவையில் மதிதயன் மற்றும் நாகராஜா ஆகியோர் செயற்பட்டதுடன் அவர்கள் நிகழ்வில் பொன்னாடை போர்த்தப்பட்டு நினைவு சின்னங்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

மேலும் இவ்விருவரும் தத்தமது சேவைக்கால அனுபவங்களை நிகழ்வில் உரைகளாக முன்வைத்ததுடன் குறித்த இருவரையும் ஓய்வு காலங்களில் சிறப்பாக குடும்பங்களுடன் தேகாரோக்கியத்துடன் வாழ நிகழ்வில் பங்குபற்றியோர் ஆசிர்வாதங்களை வழங்கினர். (அ)



# கொழும்பு மாநகர சபையின் பழைய பத்திரிகைகள் திருட்டு

கொழும்பு, ஒக். 26

கொழும்பு மாநகர சபைக்கு சொந்தமான வெள்ளவத்தை மெனிங் சந்தையில் உள்ள களஞ்சியசாலையிலிருந்து 1486 கிலோகிராம் பழைய பத்திரிகைகள் திருடப்பட்டுள்ளதாக வெள்ளவத்தை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அதன்படி, திருடப்பட்ட பழைய பத்திரிகைகளின் பெறுமதி சுமார் மூன்று இலட்சம் ரூபாவுக்கும் அதிகம் என பொலிஸாருக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

வெள்ளவத்தை மெனிங் பொதுச் சந்தையின் நான்காவது மாடியில் இந்தக் கடை அமைந்துள்ளது.

மேலும், கடந்த செப்ரெம்பர் மாதம் 9ஆம் திகதி முதல் நேற்று முன்தினம் வரையான காலப்பகுதியில் இந்த திருட்டு இடம்பெற்றுள்ளதாக வெள்ளவத்தை பொலிஸில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# கட்டாரின் இராஜதந்திரம் வெற்றியளிக்குமா?...

(14ம் பக்கத் தொடர்ச்சி)

இராணுவத் தளவாடங்களும், ஆயுதங்களும் ஏற்றப்பட்டன. மருத்தவர்களும், செவிலியர்களும் ஏற்றப்பட்டனர். விமானங்கள் எண்டபிக்கான 4000 கி.மீ பயணத்தை தொடங்கின. கடல் மார்க்கமாகவே விமானங்கள் ஓட்டிச் செல்லப்பட்டன. நான்கு விமானங்களும் எண்டபி விமான நிலையத்தில் சத்தமில்லாமல் தரை இறங்கின.

விமானத்திலிருந்து இராணுவ பீரங்கிகள் மற்றும் ஜீப்புகளுடன் இஸ்ரேலிய இராணுவ வீரர்கள் இறங்கினர். திடீர் அதிரடியால் பணயக் கைதிகளை விடுவித்து இஸ்ரேலிய இராணுவ வீரர்கள் கூட்டிச் செல்லும் வழியில், தீவிரவாதிகள் எதிர்தாக்குதலில் ஈடுபட்டனர்.

அவர்களுடன் உகாண்டா இராணுவமும் சேர்ந்து கொண்டு, மீட்புக் குழுவினருக்கும், தீவிரவாதிகளுக்கும் ஃஉகாண்டா இராணுவ வீரர்களுக்கும் நடந்த இந்தச் சண்டையில் மேலும் இரண்டு பணயக் கைதிகளும் ஒரு இஸ்ரேலிய தளபதியான யோனாதன் நேத்தன்யாஹூம் கொல்லப்பட்டனர்.

**பிரதமர் நெத்தன்யாஹூவின் அண்ணன் களப்பலி:**

இவர் வேறுயாறும் அல்ல, இன்றைய இஸ்ரேலின் பிரதம மந்திரியான பெஞ்சமின் நேத்தன்யாஹூவின் தமையனார். கடத்தல்காரர்கள் தரப்பில் அனைத்து கடத்தல்காரர்களும் உயிரிழந்தனர். உகாண்டா இராணுவத்தைச் சேர்ந்த 40 வீரர்களும் நடந்த சண்டையில் கொல்லப்பட்டனர். மீட்பு முயற்சி சுமார் 90 நிமிடங்கள் நடைபெற்றது. ஏனைய பணயக் கைதிகளும், இஸ்ரேலிய இராணுவ வீரர்களும் இஸ்ரேல் நாடு திரும்பினர்.

ஒபரேஷன் தண்டர்போல்ட் வெற்றிகரமான நடவடிக்கை யாவும் **90 Minutes at Entebee** என்ற பெயரில் புத்தகமாக வெளிவந்திருக்கிறது. இந்தச் சம்பவங்களை வைத்து ஹாலிவுட்டில் பல திரைப்படங்கள் வெளியாகியிருக்கின்றன. அவற்றில் **The Delta Force** எனும் படம் குறிப்பிடத்தக்கது

**போர் நிறுத்தம் வாய்ப்பு இல்லை?**

ஹமாஸ் உடன் போர் நிறுத்தம் செய்ய வாய்ப்பு இல்லை என தற்போது இஸ்ரேல் பிரதமர் அறிவித்துள்ளார். ஹமாஸ் அமைப்பிடம் 199 பேர் பிணை கைதிகளாக உள்ளனர் என்று இஸ்ரேல் தெரிவித்துள்ளது. இஸ்ரேல் - ஹமாஸ் இடையே தொடர்ந்து போர் நடந்து வருகிறது. தற்போது 199 பேர் பிணைய கைதிகள் விடுவிக்கும் வரை போரை நிறுத்துவது பற்றியோ, அல்லது படைகளுடைய எண்ணிக்கையை குறைப்பது பற்றியோ எந்த முடிவுக்கும் வர முடியாது என இஸ்ரேல் ராணுவம் தெளிவாக கூறியுள்ளது.

இந்தப் போரை நிறுத்த எங்களுக்கு என்ன வழி செய்வது என்று தெரியவில்லை என வெளிப்படையாகவே ஐநாவின் பொது செயலாளர் தெரிவித்துள்ளார். எங்களுக்கு உதவி தேவை, பாதுகாப்பான இடங்கள் பற்றிய தெளிவு தெரியவில்லை. குறிப்பாக மக்களை வெளியேற்றுவதற்கு இஸ்ரேல் தாக்குதல் நடத்தாமல் இருக்க வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

ஆயினும் தற்போது ஹமாஸ் உடன் போர் நிறுத்தம் செய்ய வாய்ப்பு இல்லை என இஸ்ரேல் பிரதமர் திட்டவட்டமாக தெரிவித்துள்ளார். ●



